யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்
Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 20 வெள்ளிக்கிழமை (06~10~2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:245


# பொ.ஐ.முவின் தேர்தல் கூட்டத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## தேர்தலின் பின் நோர்வேயின் முயற்சி தொடரும்

கொழும்பு,ஒக்.6

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலின் பின்னரே நோர்வேயின் அமைதிப் பேச்சு முயற்சி ஆரம்பமாகும் என்று அந்நாட்டின் இலங்கைக்கான அமைதித் தூதுவர் எரிக் ஷோல்கெயின் தெரிவித்துள்ளார்.

நோர்வே அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்னெடுத்துள்ள முன் முயற்சிகளை விமர்சிக்கும் வகையில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ள கருத்துக்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

இலங்கை அரசாங்கமும், விடுத

(20ஆம் பக்கம் பார்க்க)

## மதவாச்சியில் நேற்று 13 பேர் பலி 50க்கும் அதிகமானோர் காயம்

கொழும்பு,ஒக்ரோபர்6

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இரு பொலீஸார் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்; ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.**


**மதவாச்சி பஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை 5.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.**

தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த மேடையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைவதற்கு இளைஞர் ஒருவர் முயன்றார் என்றும்-

அவரைச் சோதனை செய்வதற்காகப் பொலீஸார் அணுகிய சமயம் அவரது உடலில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது என்றும் - மதவாச்சிப் பொலீஸார் தெரிவித்தனர்.

கூட்டத்தில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்த பிரதி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மயிரிழையில் உயிர் தப்பினார் என்றும் -

(20ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.பஸ்நிலையத்தில் நேற்று இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் முடித்து வைத்த போது எடுக்கப்பட்ட படம்.

*படம்:-கொனிக்கா கலர் லாப்*

## ஆளும் கட்சித் தலைவர்களுக்கு குண்டு துளைக்காத கார்கள்!

### தாக்குதல்களை அடுத்து அரசு நடவடிக்கை

கொழும்பு,ஒக்.6

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை அடுத்து முக்கிய அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காக இருபது குண்டு துளைக்காத கார்களை அரசு அவசர அவசரமாக இறக்குமதி செய்துள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து ஆளும் கட்சி வேட்பாளர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அவசர அவசரமாக குண்டு துளைக்காத கார்கள் இறக்குமதி செய்யப்பட்டு முக்கிய தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதேசமயம் -முக்கிய அரசியல் தலைவர்கள் பயணம் செய்யும் பெருந்தெருக்களில் பேரணிகள் செல்லப் பொலீஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வீதியால் சென்ற மூவர் கிரனேட் வெடிப்பில் காயம்

### யாழ்.நகரில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நேற்று மாலை 4.30மணி அளவில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் மூன்று பொது மக்கள் காயமடைந்தனர்.

பொன்னையா ஜெகநாதன்(வயது 49-கொக்குவில்), சண்முகரட்ணராஜா மதுமயாள் (வயது 21 - கோண்டாவில்), சின்னராஜா அன்ஸ்ரிகா (வயது 21 - நவாலி தெற்கு) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் புலிகளின் துண்டுப்பிரசுரம்

வவுனியா,ஒக்.6

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்கட்சிகளுக்கு துணைபோகாமலும் ஆதரவளிக்காமலும் இருக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

வவுனியா நகரில் நேற்று மக்கள் மத்தியில் பரவலாக விநியோகிக்கப்பட்ட 'எச்சரிக்கை' என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரத்தில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அந்த பிரசுரத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு :-

தமிழீழ வரலாற்றிலேயே மிகவும் நெருக்கடியானதும் வேதனையானதுமான காலகட்டத்தில் எம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இராணுவம் எமது தாய் மண்ணை ஆக்கிரமித்து எம் மக்கள் மீது தாங்கொணா கொடுமைகளை விளைத்து வருகிறது. சொந்த மண்ணிலேயே எம் மக்கள் அடிமைகளாகவும் சிறைக் கைதிகளாகவும் அல்லற்படுகிறார்கள். உயிர் அழிவும் பொருள் அழிவுமாக, இரத்தமும் கண்ணீருமாக, பசியும் பட்டினியுமாக, பயமும் பதற்றமுமாக எம் மக்களது வாழ்க்கை நாசமாக்கப்பட்டுள்ளது.

எம் மக்கள் மீது திணிக்கப்பட்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம், மிருசுவிலில் புலிகள் நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

விடுதலைப் புலிகள் நேற்றுப் பகல் கொடிகாமம்,மிருசுவில், எழுதுமட்டுவாழ் பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்தினர். இந்தத் தாக்குதல்களில் ஒரு சிப்பாய் இறந்ததாகவும் மற்றும் நான்கு பேர் காயமடைந்ததாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகலில் இராணுவத்தினர் மட்டுவில் வடக்கில் உள்ள புலிகளின் அவதான நிலையம் ஒன்றைத்தாக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஏற்பாடு குறித்து பலாலியில் நேற்று மாநாடு

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ்மாவட்டத் தேர்தலின் இறுதி ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான விசேட மாநாடு ஒன்று நேற்று பலாலி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, பிரதிக்கட்டளை அதிகாரி மேஜர்

(20ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துச் சபை ஊழியர் பஸ்நிலையத்தில் போராட்டம்!

யாழ்ப்பாணம்,ஒக்.6

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் 1999ஆம் ஆண்டுக்குக்கான இடர்காலக் கொடுப்பனவை வழங்கக் கோரி நேற்று யாழ்.பஸ் நிலைய சாலையின் முன்பாக உண்ணாவிரதம் இருந்தனர்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இந்த உண்ணாவிரதம் இடம்பெற்றது.

போக்குவரத்து சேவைகள் எதுவும் பாதிக்கப்படாத நிலையில் காரைநகர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் சாலைகளைச் சேர்ந்த ஊழியர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி பல சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு உண்ணாவிரதிகள் காணப்பட்டனர்.

இந்த உண்ணாவிரதிகளைச் சந்திப்பதற்காக யாழ். பஸ்நிலையப் பகுதிக்கு வந்த புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் அவர்களுடன் பேச்சு நடத்திய பின் போக்குவரத்து அமைச்சர் பௌஸி மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறி வர்த்தனா ஆகியோருடன் தொடர்பு

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.யின் தேர்தல் பிரசார வாகனம் மீது கிரனேட் வீச்சு!

### மூவர் காயம் அடைந்தனர்

யாழ்ப்பாணம்,ஒக.6

காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் பூநாறி மரத்தடிப்பகுதியில் நேற்று நண்பகல் இடம் பெற்ற கிரனேட் வீச்சுச்சம்பவத்தில் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த சமயமே இந்த கிரனேட் வீச்சு இடம்பெற்றது.

அவர்கள் பயணம் செய்த மினி வானின் முன்பகுதிக்குள் கிரனேட் விழுந்து வெடித்ததாகவும் -

அச்சமயம் வானுக்குள் இருந்தவர்களே காயம் அடைந்தனர் என்றும் -ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச்சம்பவத்தில் வானில் இருந்த கனகசிங்கம் தீபன்(வயது19), தர்மகுலசிங்கம் தர்மசீலன்(வயது20), எஸ்.ஞானசேகரம்(வயது21) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். இவர்கள் மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் சென்ற மினிவானும் சேதமடைந்துள்ளது. (இ-5-8-10-15-51-86)

## ஈ.பி.டி.பி.கண்டனம்

கொக்குவில் பகுதியில் நேற்றைய தினம் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலுக்கு ஈ.பி.டி.பி. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஈ.பி.டி.பி. நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

கொக்குவில் பகுதியில் நிராயுதபாணிகளாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த எமது ஆதரவாளர்கள் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதையிட்டு ஈ.பி.டி.பி. தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

## ஜனநாயக இடதுசாரி முன்னணி



சி.கா. செந்திவேல்
முதன்மை வேட்பாளர்

இல. 7



கா. கதிர்காமநாதன்
(செல்வம்)
வடபிரதேச செயலாளர்
புதிய ஜனநாயகக் கட்சி

* யுத்தத்தால் அழுக்கப்பட்டுவரும் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் கோரிக்கைகளை வென்றெடுக்க!
* விவசாயிகள் - உழைக்கும் மக்களின் அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க!
* கரையோர மக்களின் கடற்றொழிலாளர்களின் துயர் வாழ்வு போக்கிட!
* தொழிலாளி வர்க்கத்துக்கு மறுக்கப்பட்டுவரும் உரிமைகளுக்காக குரல் கொடுக்க!
* ஒடுக்கப்பட்ட மக்களின் பின்தங்கிய வாழ்வில் மாற்றங்கள், சமத்துவம் ஏற்படுத்த!
* அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள், பெண்கள், மாணவர்கள் இடர்கள் போக்கிட!

### வாக்களியுங்கள்!





வாசுதேவ
நாணயக்கார



சட்டத்தரணி எல்.எல்.பி
சோ. தேவராஜா

இல. 12

(78941)


## பெருமாள் கோயில் தேர்த்திருவிழா நாளை காலையில்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப் பெருமாள் கோயில் தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறும்.

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 9 மணிக்கு வேங்கடேசப் பெருமாள் ரதத்தில் ஆரோகணித்து வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 10.33 மணிக்கு தேரில் ஆரோகணித்தலும் நடைபெறு மென முன்னர் அறிவிக்கப்பட்டிருந் தது. எனினும் இப்போது மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக ஆலய நிர் வாகிகள் தெரிவித்தனர். (அ)

## உரும்பிராயில் கூட்டணியின் பிரசாரக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராய் ஞானவைரவர் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

கூட்டணியின் தலைவர்கள் இதில் கலந்து உரையாற்றுவர். (இ-3)


# சுயேச்சைக்குழு - இல.3 (ஸ்ரீ ல.சு.கட்சி)



திரு. வேல்முருகு தங்கராசா

இல. 11

(அ.இ.ச. நீதிவான்)
(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு உறுப்பினர், யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சு.கட்சி முதன்மை வேட்பாளர்.)

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வாழ்வின் விதி'
'அழிவு இல்லாமல் ஆக்கம் இல்லை'
ஆனால் கருக்கட்டாத கூழ் முட்டைகளாக எமது வாழ்வு தொடருமானால் எங்கே வாழ்வின் தொடர்ச்சி மீதமாம்?
உங்களுக்கு அமைதியான, நிம்மதியான வாழ்வு கிடைக்க ரெலிபோனுக்கே உங்கள் வாக்குகளைத் தந்திடுங்கள்!



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |



திரு. ஆழ்வார்பிள்ளை கந்தசாமி

இல. 2

(அ.இ.ச. நீதிவான்)
(யாழ். இடைக்காடு மகாவித்தியாலய பழைய மாணவன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதம அமைப்பாளர்- கோப்பாய்த் தொகுதி, கொழும்பு தமிழ்ச் சங்கக் கல்விக்குழுச் செயலாளர்)

சந்திரிகாவின் ஏகப் பிரதிநிதிகள் நாமே!

(78940)





# உலக சேவை தினம்

## யாழ்ப்பாணம்

We Serve

## லயன்ஸ் கழகம்

எதிர்வரும் 08.10.2000 ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் மகேஸ்வரா இல்லத்தில் சிறுவர்களுக்கு விருந்தளிக் கப்படும். அன்றையதினம் அவர்களுக்கு இருவார காலத்திற்குப் போதுமான உணவுப் பொருள்கள் உவந் தளிக்கப்படும்.

லயன் டாக்டர்

**S.S. அருளானந்தம்**

"கண், பல் பாதுகாப்பு" பற்றி விளக்கம் கொடுப்பார்.

**லயன் B.R. ரஞ்சன்,**

**லயன் S. செல்வக்குமார்**

*இந்நிகழ்விற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்*

யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்கள் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கப்படு கின்றனர்.

B.R. ரஞ்சன்
(செயலாளர்)

J. முத்துக்குமாரசாமி
(தலைவர்)

(C/13241)



# பணிவான வேண்டுகோள்!

## அன்புள்ள வாக்காளர்களே!!

உங்களில் பலரைச்சந்தித்துள்ளோம். நீங்கள் தரும் பேராதரவு எமக்கு உற்சாகத் தைத் தருகின்றது. தொடர்ந்தும் ஏனையவர்களையும் சந்திக்க முயலுவோம். நாள்கள் மிகவும் சொற்பமாக உள்ளமையாலும் போக்குவரத்துச் சிரமம் காரணமாகவும், சூழ்நிலை காரணமாகவும் உங்களில் சிலரைச் சந்திக்க முடியாமற் போகலாம். அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின் தயவுசெய்து எம்மை மன்னியுங்கள். எங்கள் சிரமத்தை உணர்ந்து சுதந்திர இலட்சியத்திற்காக, உழைக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிற்கு இலட்சியப்பற்றோடு வாக்களிக்கும்படி உங்கள் ஒவ்வொருவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.



அ. விநாயகமூர்த்தி
தலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

(78939)



# அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2000

யாழ். மாவட்டம்





இல. 8



தமிழினத்திற்காய் தன்னுயிர் நீத்த அமரர் மாமனிதர்
குமார் பொன்னம்பலம்

நடராஜ ராஜசூரிய
முன்னாள் தொழிலதிபர்
கட்டடக் கலைஞர் (Architect)
541/2 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(78948) *"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"*



மாவை/கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற திரு. வே. நடராஜா அவர்களின் புதல்வனும், இளம் சட்டத்தரணியுமான

## திரு. ந. இரவிராஜ் (பிரதி முதல்வர் யாழ். மாநகரசபை)

அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வேட்பாளராக நியமிக்கப்பட்டதனை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் வெற்றிபெற தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதயசூரியனுக்கு வாக்களித்து, எமது விருப்பு வாக்கின் ஒன்றினை இவரது இலக்கமாகிய 6க்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்வோமாக!

தமிழர் விடுதலைக் கூட்டணி நடராஜா இரவிராஜ் இல. 6



நடராஜா இரவிராஜ்
சட்டத்தரணி
பிரதி நகர பிதா
யாழ். மாநகர சபை

தமிழர் விடுதலைக் கூட்டணி



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

(78949)

*-நேர்மை, உண்மை, இலட்சியத்துக்கான அயராத உழைப்பு-*

உற்றார், உறவினர், நண்பர்கள்.



# அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2000

யாழ். மாவட்டம்





இல. 2



தமிழினத்திற்காய் தன்னுயிர் நீத்த அமரர் மாமனிதர்
குமார் பொன்னம்பலம்

அப்பாத்துரை
விநாயகமூர்த்தி
சட்டத்தரணி, தலைவர்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

(78913) *"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"*



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
2000-10-10
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கத் தலைவர்
**திரு.சி.சிவமகாராசா**
அவர்களை ஆதரியுங்கள். இல. 11



| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

உதயசூரியன் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டும் இலக்கம் 11க்கு மேலே புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடலாம்.

(78916)



உலக உளநல நாள் ஒக். 10

## நலம் தரும் நடவடிக்கைகள்

### 6. சுறுசுறுப்பாக இருத்தல்



எங்களுக்கு ஏற்படுகின்ற மனச் சோர்வு, பதற்றம் போன்றவற்றிலிருந்து விடுபட உடற்பயிற்சி பெரிதும் உதவும். இது எங்கள் உடலில் உள்ள சக்தியை அதிகரிக்கும்.

நடத்தல், ஓடுதல், ஆடுதல், சைக்கிள் சவாரி, விளையாட்டு, நீந்துதல்..... இவற்றில் எவ்வற்றைத் தெரிவு செய்யப் போகின்றீர்கள்?



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

* வீரகேசரி பத்திரிகையில் பத்திரிகையாளர்
* ஐ.பி.சியில் ஆஞ்சனேயர்
* யாழ்.இந்துவின் பழைய மாணவர்

பயங்கரவாத சிறைச் சட்டத்தின் கீழ் 6ஆம் மாடியிலும் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்ட எஸ்.ஸ்ரீகஜனுக்கு தமிழ் இளைஞர், யுவதிகள் சிறையில் அனுபவிக்கும் கொடுமைகள் தெரியும். அப்பாவி தமிழ் இளைஞர், யுவதிகளை சிறையில் இருந்து மீட்க ஸ்ரீகஜனுக்கு ஆதரவு அளிப்போம்.



எஸ்.ஸ்ரீகஜன்
ஐ.பி.சி. ஆஞ்சனேயர்
பத்திரிகையாளர்

| இலக்கம் 8 | ஐ.தே.க. | | X |
|---|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

எஸ்.ஸ்ரீகஜனின் வெற்றி எமது வெற்றி

(78945)



**VOTE FOR PEACE**
சமாதானத்துக்கு வாக்களியுங்கள்!



**RATNARAJAH RATNASINGHAM**
From **Germany** For Jaffna

Member of the
Social Democratic Party
(Germany)

யாழ்ப்பாணத்துக்கு....
ரட்ணசிங்கம் ரட்ணராஜா
(ஜேர்மனி ராஜா)

X இல 14

(78942)



## நாடாளுமன்றத் தேர்தல் 2000 – யாழ். மாவட்டம்

### அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி - இல.3(மூன்று)

அன்பான தமிழ்பேசும் மக்களே! உரிமைகள் சலுகைகளல்ல.
அடிபணிந்து பெறும் பிச்சையுமல்ல! உரிமைகளை நிரந்தரமாக்கிக் கொள்ள நாமே போராடவேண்டும்! தெற்கிற்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் ஒன்றைக் கூறியும் செய்தும் வந்துவிட்டு, யாழ். குடாவுக்கு வந்து, இன்று ஏமாற்று மொழிகள் பேசும் சந்தர்ப்பவாத, விலாங்குத் தமிழர் அணியினையும், ஏனைய தலையாட்டும் கைப்பொம்மைகளையும் நிராகரியுங்கள்! எம்முடன் இணையுங்கள்! இதய சுத்தியுடன், தலைநிமிர்ந்து செயற்படுவோம்! வெற்றி காண்போம்!



குமார்
பொன்னம்பலம்

**அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி**
**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**

X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

(78922)



அபிமன்னசிங்கம்
மாணிக்கசோதி



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
ரசிகர்களே!
இன்று முதல்
குதூகல ஆரம்பம்
விஜய், ஜோதிகா
மற்றும் பலரின்
நடிப்பில்
**குஷி**
காட்சிகள்: 10.30, 2.00 (பி.ப.)
(C/13207)



**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
ரசிகர்களே!
இன்று மட்டும்
விஜய், சிம்ரன், மணிவண்ணன்
நடிப்பில்
துள்ளாத மனமும் துள்ளும்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பி.ப.)
நாளை முதல் குதூகல ஆரம்பம்
பூ மகள் ஊர்வலம்



## வாழ்த்துகின்றோம்

மிலேனிய ஆண்டில் இன்று பட்டம் பெறும் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

அனுசரணை : **கஜமுகன் ஹாட்வெயர்**
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
எழுதுவினைஞர்
தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்

(C/13236)





சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும் யுத்தத்தையும்
அவசரகாலச் சட்டத்தையும் இல்லாதொழிக்க
**தோடம்பழச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்**

| சுயேச்சைக் குழு - 1 | | X |
|---|---|---|
| தர்மராஜா வில்சன் | இல. | 7 |

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)



தர்மராஜா வில்சன்
முதன்மை வேட்பாளர்
இல. 7

(78919)

தம்பசிட்டி

## அருள்மிகு ஸ்ரீபண்டாரி அம்மன் கோயில்

**இன்று வெள்ளிக்கிழமை**
**மாலை 4 மணிக்கு மகிடாசூரசங்காரம்.**

நாளை சனிக்கிழமை பகல் 10 மணிக்கு சண்டிகா ஹோம திவ்வியப் பெருவிழா, மகாபூர்ணாகுதி, இலட்சார்ச்சனை பூர்த்தி இடம்பெறும்.

சி. சபாரத்தினதேசிகர்
ஆதீனகர்த்தா

(79167)

## உலக ஆசிரியர் தினம்

"ஒக்ரோபர் – 06"

இடம்:- பாடசாலை "L" மண்டபம்
காலம்:- 06–10–2000 வெள்ளி
முற்பகல் 8-30 மணி

தலைவர்:- திரு. வே. வீரபத்திரபிள்ளை
[நிர்வாக உத்தியோகத்தர், செயலகம், யாழ்ப்பாணம்]

பிரதம விருந்தினர்:- திரு. செ. ஸ்ரீநிவாசன்
(பிரதேச செயலர், கரவெட்டி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
**யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்,**
கரவெட்டி.

(சி/13246)

## உலக ஆசிரியர் தினம்-2000

இன்றைய தினத்தில் எமது விரிவுரையாளர்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன் இதே தினத்தில் பட்டம் பெறும் எமது நிறுவன விரிவுரையாளர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

– மாணவர் மன்றம்

IIS.,
யாழ்ப்பாணம்.

(79164)

## ST. PATRICK'S COLLEGE
## அனுமதிப் பரீட்சை - 2001

ஏற்கனவே அறிவித்ததுபோன்று மேற்படி பரீட்சை நாளை சனிக்கிழமை 07–10–2000 அன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
பரீட்சை ஆரம்பமாகும் நேரம் மு.ப.9.00மணி.

– அதிபர்

(13234)

## கண்ணீர் அஞ்சலி

எமது அணி மாணவன்
கு. வி. நிஷாந்தனின்
அன்புத் தந்தையார்
**அமரர் விசுவலிங்கம்**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2 ஆம் வருட மாணவர்கள்,
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

சி/13247)

## மரண அறிவித்தல்
## கல்லடி வேலுப்பிள்ளை நடராஜா

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்—பண்டாரவளை)

வசாவிளானைச் சேர்ந்த ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது மகனான நடராஜா 96 ஆவது வயதில் 4-10-2000 புதன்கிழமை ஜா-எலவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமணியின் அன்புக் கணவரும் பாலநடராஜா (சர்வதேச சட்டத்தரணி) அவர்களின் அன்புத் தந்தையாரும் கிறிஸ்ரீனாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான க. வே. பாலசுப்பிரமணியம்(கல்லடி மணியம்), க.வே. சாரங்கபாணி, க.வே.இரட்ணசபாபதி(நயினார்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வியாழக்கிழமை (5-10-2000) கொழும்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி சுசீலா சாரங்கபாணி
(பெறாமகள்)

"சாரங்கம்"
உரும்பிராய் தெற்கு.

(79171)

## ஈ. பி. டி. பி. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஈ. பி. டி. பி ஜனநாயக வழியில் செயற்படுகின்ற கட்சி ஜனநாயக வழியில் எமது மக்களுடைய அரசியல் அபிலாசைகளுக்கு நீதியான கௌரவமான தீர்வு காணவும், அத்தீர்வு எட்டப்படும் வரை எமது மக்கள் அன்றாடப் பிரச்சினைகளால் நலிந்து போகாதிருக்கவும் சகல நடவடிக்கைகளையும் ஈ.பி.டி.பி. மேற்கொண்டு வருகின்றது.

இதைவிடுத்து எந்தவொரு தேசவிரோத — சமூக விரோத — செயற்பாடுகளிலும் ஈ. பி. டி. பி ஈடுபட்டதாக வரலாறு இல்லை. இதனை எமது அன்புக்கினிய மக்களும் அறிவர்.

ஆனால் மக்களின் துயர் துடைக்க மக்களோடு மக்களாக இதய சுத்தியுடனும் உண்மையான அர்ப்பணிப்புடனும் செயற்பட்டுவரும் ஈ. பி. டி. பி மீது இத்தகைய கோழைத்தனமான தாக்குதல்களை மேற்கொள்ளும் ஜனநாயக விரோத சக்திகள் மீது, தமிழ் மக்களுக்கு நிரந்தரச் சமாதானம் உருவாக்க விரும்புகின்ற அனைவரும் சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளது.

வவுனியா, மன்னார் என எந்தவொரு இடத்திலும் உருளைக்கிழங்கு, தேங்காய், மீன் போன்றவற்றிற்கு ஈ. பி. டி.பி. மக்களிடமிருந்து வரி வசூலிப்பதில்லை. மக்களைக் கடத்தி கப்பம் வசூலிப்பதில்லை. மர்மக் கொலைகள் அல்லது தலையை வெட்டுதல் போன்ற குரூரமான பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. மட்டக்களப்பில் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து புலிவேட்டையில் ஈடுபடுவதில்லை. அல்லது மட்டக்களப்பில் தனியான இராணுவக் குழுக்கள் அமைத்து இளைஞர்களை பலவந்தமாக இராணுவத்தில் சேர்த்து புலிவேட்டை என்ற பெயரில் மக்களுக்கு அநியாயம் புரிவதில்லை.

சமூகவிரோதச் செயல்களிலும் ஈ. பி. டி. பி இதுவரை ஈடுபட்டதில்லை. ஆனால் ஈ. பி. டி. பியை புலிகள் உட்பட சகல அரசியற் கட்சிகளும் ஏன் தாக்குகின்றன என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஈ. பி. டி. பி அரசியற் சுயநலமின்றி தமிழ்ப் பேசும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் போராடுவதே அதன் மீது அனைத்து சக்திகளும் விரோதம் கொள்வதற்குக் காரணம் என நாம் கருதுகின்றோம்.

நாம், தீவகத்தில் காலடி எடுத்து வைத்து 10 வருடங்களும் யாழ்.மண்ணில் காலடி வைத்து 3 வருடங்களும் தான் உருண்டோடியிருப்பினும், இக்குறுகிய காலத்தில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
168 புள்ளிதனைப் பெற்று
எமது பாடசாலையாகிய
அமெரிக்கன் மிஷன்
தமிழ்க்கலவன் பாடசாலைக்குப்
பெருமை சேர்த்துத்தந்த மாணவன்



**செல்வன் கமலானந்தன் சயந்தன்**
அவர்களையும்

148 புள்ளிதனைப் பெற்ற
யா/ சாவகச்சேரி
இந்து ஆரம்பப் பாடசாலையின்
மாணவன்



**செல்வன் இராசேந்திரம் கோபிராஜ்**
அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

மாணவன் சயந்தன் அவர்களுக்குக் கல்வி கற்பித்த பாடசாலையின் ஆசிரியர்களுக்கும், மட்டுவில் வளர்மதி கல்வி நிலைய நிர்வாகியும் ஆசிரியருமான அன்பழகன் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் —

மாணவன் கோபிராஜ் அவர்களுக்குக் கல்வி போதித்த பாடசாலையின் ஆசிரியர்களுக்கும், ஆசிரியை கற்பகம் (ஆசை) அவர்களுக்கும் எமது நன்றிகள்!!

வாழ்த்துவோர்:
என்றும் உங்கள் நினைவில் நிற்கும்
**ஊர்மிளா போட்டோ**
ஸ்தாபனத்தினர்
3 ஆம் கட்டை, கல்வியங்காடு.

(சி/13237)

## உடுவில் மகளிர் கல்லூரி
## பாராட்டி வாழ்த்துகிறோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1: | த. சஞ்சேயன் | - 175 | 12: | ம. றாகவன் | - 147 |
| 2: | சி. றஜீவி | - 171 | 13. | சி, சிவதனுஜன் | - 144 |
| 3. | தே. டிலானி | - 168 | 14. | சி. வைஸ்ணவி | - 143 |
| 4. | சி. சிவதர்சன் | - 165 | 15. | ஜெ. வரலக்ஸ்சன் | - 143 |
| 5. | ஆ. டெறிக் | - 160 | 16. | சு. கஜீபன் | - 143 |
| 6. | அ, டொறின் அனுசியா | - 154 | 17. | சி. சிவாஜினி | - 142 |
| 7. | ப, கெனத் | - 154 | 18. | ம. குணதீபா | - 139 |
| 8. | சி. மலரவன் | - 153 | 19. | கு. சுபகௌரி | - 138 |
| 9. | சி. தனந்திகா | - 151 | 20. | ப. பிரவிந்தா | - 137 |
| 10. | ஜெ. பவித்திரா | - 150 | 21. | ரா. சைலஸ் | - 136 |
| 11, | ரா. தனுஜா | - 148 | 22. | கு. கானப்பிரியா | - 134 |

2000 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 22 மாணவச் செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு கற்பித்த ஆசிரியர்களையும், அதிபரையும் வாழ்த்துகிறோம்.

உடுவில் மகளிர் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(சி/13831)

உதயன்

## ஆசிரியர் - மாணவர் நல்லுறவு வளர்க

மாதா, பிதா, குரு ஆகிய மூவரையும் தெய்வங்களாகக் கொண்டு அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து, அவர்கள் காட்டும் வழியில் பண்பும், பயனும் உடைய மாணவர்களாகப் பயின்று, நற்பிரஜைகளாக வாழ்ந்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களும் குரு - சிஷ்ய கல்வி முறையும் எமது பாரம்பரியங்கள். குரு எவ்வழி, மாணவனும் அவ்வழிஎன்ற தன்மை; மாணவனைத் தனது சொந்த மகனாகக் கருதி தனதுவித்தைகளை மட்டுமன்றி நல்ல பழக்க வழக்கங்களைப் புகட்டுவதற்காக அவ்வாறே வாழ்ந்து காட்டும் நற்குரு. இந்தச் சிறப்புக்கள் இப்போது வெறும் வரலாறாகிவிட்டது.

சிறந்த கல்விக்கு ஆசிரியர் மாணவர் — நல்லுறவு அவசியம். தன்னிடமுள்ள கல்விச் செல்வத்தை மாணவனுக்கு மனம் விரும்பித் தானம் செய்யும் சேவை மனப்பாங்கு ஆசிரியரிடம் உறைந்திருக்க வேண்டும். ஆசிரியரை உயர்ந்த இடத்தில் வைத்து, மதித்துப் போற்றி அவர் சொற்கேட்டு, அவருக்கு நன்றியுள்ளவனாக இருந்து கல்வி அறிவைப் பெறுவதே— தேடிக்கொள்வதே — நல் மாணாக்கனுக்குச் சிறப்பு.

நல்லாசான்களின் அர்ப்பணித்த சேவை மூலமே நல் மாணாக்கர்களை உருவாக்க முடியும்; சீரிய சமூகத்தைத் தோற்றுவிக்க முடியும். அன்பும், பண்பும், அமைதியும், நீதியும் துலங்கும் சமுதாயத்தைச் சிருஷ்டிக்கும் வல்லமை ஆசிரியர்களுக்கே உண்டு.

இரண்டு தரப்புகளுக்கும் இடையேயான நல்லுறவே. சமூகத்தின் வளர்ச்சி. ஆனால் இன்றைய சந்ததியில் இரண்டு தரப்புகளிடமே அது கோணிக் கிடக்கிறது.

அனைத்துலக ஆசிரியர்தினம் அந்தக் கோணலை நிமிர்த்துவதற்கு உதவும்; சரியாகக் சொன்னால் மாணவர் மத்தியில் ஒரு விழிப்புணர்வை உண்டாக்கும். ஆசிரியர்களுக்கும் தாம் சமூகத்தினால் மதிக்கப்படுகிறார்கள் என்ற பெருமை உணர்வு பிறக்கும்.

மேற்குறிப்பிட்ட விழிப்புணர்வும், மதிப்புணர்வும் வருடத்தில் ஒரு நாளைக்கு மட்டுமன்றி வருடம் முழுவதும் தொடர வேண்டும். அதற்கான தொடர் திட்டங்கள் தேவை. இதுவரை இரண்டு தரப்புகளிலும் உண்டாகிய பிளவுகள், தவறுகள் சீராக்கப்படவேண்டும்; திருத்தப்படுவது அவசியம்.

அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடும் ஓர் இனத்தை அதன் கல்வி மேம்பாட்டை நேரிடையாகவோ மறைமுகமாகவோ தடுத்துத் தறுக்கணிக்க, போராட்டத்துக்கு எதிரான சக்திகள் முயல்வதுஉண்டு. அதற்கு இடங்கொடாமல் கல்வியாளரும் ஆசிரியர்களும் தமது பணியைச் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் போரின் மத்தியிலும் ஆசிரியர்கள் தமது கல்விப் பணியைச் சிறப்பாகச் செய்கிறார்கள். பயங்கர ஆயுதங்கள் கொண்டு நடத்தப்படும் போரின் மத்தியிலும் இடம்பெயரும் அவலத்தின் மத்தியிலும் கல்விப் போதனை தொடர்கிறது. இன்றைய ஆசிரிய தினத்தில் அந்தச் சிறப்புக் குறிப்பிடப்பட வேண்டியது.

கல்விச் செல்வத்தின் நாயகியான சரஸ்வதியின் பெருநாளில் இன்றைய ஆசிரியர் தினம் அமைந்திருப்பது தமிழரின் கல்வி மேலும் மேன்மையுறும் — அதற்காக நமது ஆசிரியர்கள் சளைக்காது, தளராது உழைப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

# அம்பிகையின் திருவடியை அடிபணிந்து இப் புவியில் இடர்நீங்கி வாழ்ந்திடுவோம்

நவராத்திரிஆகிய ஒன்பது தினங்களும் திருவருட் சக்தியும் உலகமாதாவுமாகிய ஈஸ்வரியை விசேடமாக வழிபட்டு நாம் ஈடேறுவதற்காகிய புண்ணிய காலமாகும்.

எங்கள் ஈஸ்வரி உமை என்னும் திருநாமத்தோடு பரமசிவனுடைய இடப்பாகத்தில் எழுந்தருளி எம்பெருமானுடைய திருவருட்சக்தியாய் பஞ்ச கிருத்தியத்திற்கும் காரணியாய் விளங்குபவர்.

காஞ்சிபுரத்தின் கண்ணே ஏகாம்பரநாதசுவாமியின் வாமபாகத்திற்கு காமாட்சி என்னும் திருநாமத்தோடு விளங்கி முப்பத்திரண்டு தருமங்களையும் ஆன்மாக்கள் ஈடேறும்படி செய்பவர். சிதம்பரத்திலே நடராசப்பெருமானார் ஆனந்தத் தாண்டவம் செய்யும் போது நிருத்தசாட்சியாக சிவகாமசுந்தரி என்னும் திருநாமத்துடன் ஆன்ம கோடிகளுக்கு திருவருள் புரிபவள்.

காசி ஷேத்திரத்தில் ஆன்ம கோடிகள் தாமெடுத்த உடம்பினின்றும்பிரிதலாகிய அந்திய காலத்தில் விசுவநாதப் பெருமானார் அந்த ஆன்ம கோடிகளை ஈடேற்றும் பொருட்டு அவற்றின் செவியிலே சிவமூல மந்திரத்தை ஓதும்போது எங்கள் தாய் விசாலாட்சி என்

**இன்று சரஸ்வதி பூசை**

னும் திருநாமத்தோடு அந்த ஆன்ம கோடிகளின் சிரசை தமது அருமைத் திருவடியில் வைத்து அனுக்கிரகிப்பாள்.

திருவாலவாய் என்னும் மதுரையின் கண்ணே சோமசுந்தரப்பெருமானார் திருமருங்கில் எழுந்தருளி இறைவன் சௌந்த்ரபாண்டியராக விளங்கிய காலத்தில் தடாதகைப் பிராட்டியார் என்னும் திருநாமத்தோடு பாண்டி நாட்டைப் பரிபாலித்தாள்.

இன்னும் இலக்குமி என்னும் திருநாமத்தோடு கூடிச் சகல செல்வங்களையும், சரஸ்வதி என்னும் திருநாமத்தைப் பூண்டு சகல கலைகளையும் காயத்திரி, சாவித்திரி என்னும் பெயர் பூண்டு ஞானத்தையும் பரிபாலிப்பவள் எங்கள் அன்னையேயாவாள். மேலும் துர்க்கை, காளி, சாமுண்டி முதலிய திருநாமங்களைப் பொருந்தி துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்பவள் எங்கள் மாதாவேயாவாள்.

உலகின் கண்ணே உள்ள சராசரங்கள் தோறும் அழகின் அம்சமாக விளங்குபவளும், பெண்பாலாரிடத்து வசீகரசக்தியை உதவி பிரபஞ்சம் நடைபெறச் செய்பவளும் எங்கள் பெருமாட்டியேயாவாள். ஆன்ம கோடிகள் சோர்வடைந்த காலத்து நவசக்தியை அவைகட்கு ஊட்டி அவைகளை ஊக்கப்படுத்தி ஈடேற்றுபவள் எங்கள் பிராட்டியே.

இவ்வரிய மகத்துவங்களோடு கூடிய எங்கள் புவனேஸ்வரியை, திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு தனது ஞானப்பாலருந்தி சைவமும் தமிழும் மேன்மையுறச் செய்த பெரியநாயகியை, அபிராமிப்பட்டரின் திவ்ய தமிழ்ப் பிரபந்தத்தைக் கேட்டு அவருக்கு நேர்ந்த இடையூற்றை நீக்கிய அபிராமித்தாயை, மகேஸ்வரியை, மனோன்மணியை, தையல்நாயகியை, இராஜேஸ்வரியை, வாலாம்பிகையை இந்தப் புண்ணிய காலத்திலே தவறவிடாது விதிப்படி விரதம் அனுட்டித்து பூசித்து பரவுதல் நமது கடமை.

நவராத்திரி ஆகிய ஒன்பது தினங்களிலும் திருவருட்சக்தியாகிய ஈஸ்வரிக்கு விசேட பூசை ஆராதனை வழிபாடுகள் என்று செய்யப்படுகின்றன. நவராத்திரியுள் முதல் மூன்று இரவும் வெற்றியை வேண்டி துர்க்கா தேவியையும் அடுத்த மூன்று இரவும் செல்வத்தை வேண்டி இலக்குமி தேவியையும் இறுதி மூன்று இரவும் கல்வியை வேண்டி சரஸ்வதியும் விசேடமாகப் பூசிக்கப்படுவர். இப்புண்ணியகாலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், சூத்திரர் முதலாகச் சொல்லப்பட்ட சகல தொழிலாளிகளும் தேவியைப் பூசிக்கத் தவறமாட்டார்கள்.

நம் நாட்டின் கண்ணே இந்த நவராத்திரி புண்ணிய காலத்திலே தேவாலயங்கள், வித்தியாலயங்கள், மடாலயங்கள், சப்தகிருகங்கள் முதலாமிடங்களில் கும்பஸ்தாபகம் செய்து

**ஞானக் கதிர்**

நமது ஆசாரியர்களைக் கொண்டு விசேட பூசை வழிபாடு செய்துவருபவர்.

ஆசிரியர்களாயுள்ளவர்கள் மாணாக்கர்களுக்குத் தோத்திரங்களையும் விருத்தங்களையும் இனிமையாகப் பாடுவதற்குப் பயிற்சி, கோலாட்டம் முதலிய விளையாட்டுக்களையும் பழக்கி இந்தப் பத்துத் தினங்களிலும் ஒவ்வொரு பெற்றோர் வீடுகளுக்கும் அப்பிள்ளைகளை அழைத்துக் கொண்டுபோய் விருந்தம் படிப்பித்துப் பெற்றோர்களையும் வீட்டில் உள்ளவர்களையும் மகிழ்வித்துச் சன்மானம் பெறுவது வழக்கம்,

இனி மகா நவமியன்று எல்லோரும் புத்தகபூசை, ஆயுதபூசை என்னுமிவைகளைச் சிரத்தையோடு முற்காலத்தில் செய்துவந்தனர். இப்போது பலர் இவற்றைக் கைவிட்டு சிலர்மாத்திரம் செய்து வருகின்றனர். இம்மேலான கொள்கைகளையும் வழிபாட்டையும் நம்மோர் விபரீத புத்தி கொண்டு கைவிட்டபடியால் தான்புறக்கணிப்பு, அடிமைத்தனம், பஞ்சம், விபரீத மாறுதல்கள் முதலிய தீமைகள் எல்லாம் வருத்தத்தலைப்பட்டன. இதை உணர்ந்து இனியேனும் வெற்றியும் செல்வமும் ஞானமும்பெறும் வண்ணம் தேவியைப் பிரார்த்திப்போமாக. ★

— சி. கனகரத்தினம் —



**நாளை**

புரட்டாதி 21
சனிக்கிழமை
திதி: நவமி
முற்பகல் 8. 14 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
பிற்பகல்: 12. 34 வரை.
விஜயதசமியும்
கேதாரகௌரி
விரதாரம்பமும்
சுபநேரம்: 3.02—4.32
ராகுகாலம்: 9.02—10.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

நல்லவர்கள் சான்றோருக்கு விரோதியானாலும், நோயாளிக்கு மருந்து போல் விரும்பத்தக்கவர்கள்.

= கவிகாளிதாசன்

## பெரிய கடை நாதன் கடையிற் சுவாமிகள்



கடையிற் சுவாமிகளின் குரு பூசை தினம் இன்றாகும் எமது நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் சிவயோகிகள், சீவன் முத்தர்களில் கடையிற் சுவாமிகள் முதன்மையானவர் என்பதில் சந்தேகமில்லை. இத்தவ சிரேஷ்டர் கன்னட தேசத்தவர். சுவாமி முக்தியானந்தா என்ற தீஷாநாமம் பெற்றவர். ஆங்கிலம், கன்னடம், வடமொழி, தமிழ் ஆகிய நான்கு மொழிகளையும் பயின்றவர். உயர்ந்த பதவியிலிருந்த சுவாமிகள் திடீரென்று துறவு பூண்டார். இந்த மகானுக்கு ஞானோபதேசம் அருளியவர் மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில் அருட் செங்கோலோச்சிய அற்புதஞான சித்தர் நரசிம்மபாரதியாவார். வண்ணார் பண்ணை வையிரமுத்துச் செட்டியார் அவர்கள் சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்த வருவதற்குக் காரணமானவர்களில் குறிப்பிடத்தக்கவராவார் என்று கருதப்படுகின்றது.

சுவாமிகள் தமது உறைவிடமாக உகந்து கொண்டது யாழ்ப்பாணம் பெரியகடை. சுவாமிகள் வீடு தேடிச் சென்று உணவு அருந்துவது வழக்கம். அவரை எல்லோரும் இன்முகம் காட்டி அழைத்து அமுது படைப்பது வழக்கம். ஆனால் சுவாமிகள் மறுபடியும் அமுது வழங்கிய இல்லங்களுக்குச் செல்வது கிடையாது. உயர்வு தாழ்வு பாராட்டாது எல்லோருக்கும் அருள் பொழிந்தார். உடல் நோய்க்கும். மன நோய்க்கும், வறுமைக்கும் பரிகாரம் செய்வதில் சுவாமிகள் வல்லவர். இதனால் அடியார் கூட்டம் பெருகியது. ஏழை மக்கள் தமது வாழ்விடங்களுக்கு வருமாறு வருத்தியழைக்கத் தொடங்கினர். அவர்செல்லுமிடங்களில் மாமிசமும், மதுவும் கூட அவருக்குப் படைத்தனர். விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட சுவாமிகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார். நல்லூர் செல்லப்பா சுவாமிகள் இதனால் சிறிது மனவருத்தம் அடைந்தார். அவரைப் பரிசோதிக்க முடிவு செய்தார். ஒரு போத்தல் சாராயத்தை சால்வையில் சுற்றி மறைத்து எடுத்துச் சென்றார். இவரைக் கண்டதும் சுவாமிகள் ''வா! வா! நீயும் எனக்குச் சாராய விருந்தளிக்க வந்துவிட்டாயா? சரி, போத்தலை எடு எல்லோரும் சேர்ந்து குடிப்போம்,'' என்றார் செல்லப்பா சுவாமிகள் போத்தலை எடுத்துத் திறந்தார் திராவகம் முழுவதுமே ஆவியாக மாறி காற்றோடு கலந்தது. செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமியின் திருவடிகளைப்பற்றி கண்ணீர் விட்டு அழுதார். இக்கதையை அடியவர்களுக்கு கூறியவர் யோகர் சுவாமிகள். முப்பது வருடங்கள் எமது மக்களுக்கு அல்லல் நீக்கி அருள் பாலித்தார். கரவருடம் புரட்டாசி மாசம் பூரணையும் பூரட்டாதியும் பொருந்திய புண்ணிய வேளையில் சுவாமிகள் மகாசமாதியடைந்தார். இவரது சமாதிக்கோயில் வண்ணார் பண்ணை நீராவியடியில் உள்ளது. இக்கோயில் மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது. சிவனடியார்கள் சுவாமிகளின் குருபூசை தினமான 11—10—2000 கடையிற் சுவாமி கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து பயன் பெறவேண்டும்.

= சுடர் மகேந்திரன்

## வெள்ளி விழா

இன்று வெள்ளிவிழாக் கொண்டாடவிருக்கும்
**யாழ்ப்பாணம் தேவி அச்சக ஸ்தாபனத்தை**
மனதார வாழ்த்துகின்றோம்!

**ஜெயா ஆட் போட்டோ**
சரவணச்சேரி

தற்காலிக முகவரி:-
ஆஸ்பத்திரி பின் வீதி,
சங்கானை. (79071)



## பட்டமளிப்பு விழா

எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி நளினி கணபதிப்பிள்ளை**
யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முது மெய்யியல் மாணிப் பட்டம் பெறுவதை ஒட்டி அவரை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி. (79069)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்!
### உலக ஆசிரியர் தினம் - 2000

நல்லறிவு புகட்டி நல்வழி காட்டிடும் அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளுக்கு எமது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக!

வாழ்க ஆசிரிய சமூகத்தினர்!

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,
பழைய மாணவர் சங்கமும்.
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
(சி/13224)



## நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்
### (25 வருட ஆசிரிய சேவைக்கான பாராட்டு)

எமது கல்லூரி ஆசிரியர்
**திரு. அருணாசலம் தனபாலசிங்கம்**
அவர்கள் தமது கல்விப்பணியில் 25 வருடம் நிறைவு எய்தியதையிட்டு நெஞ்சம் நிறைய வாழ்த்துகிறோம். அவரது ஆசிரியப்பணி மேன்மேலும் சிறக்கவும், சகல சம்பத்துக்களையும் பெற்றுப் பல்லாண்டு வாழவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(சி/13189) கொக்குவில் இந்துக் கல்லூரி.



## யாழ்பாணம் இந்துக் கல்லூரி
### உலக ஆசிரிய தினம் - 2000

நம் சமூகத்துக்கு அறிவையும் ஆற்றலையும்
தந்து
நன்னெறி நிற்க வைக்கும்
அதிபர் மற்றும்
நல்லாசான்கள்
அனைவருக்கும் இன்றைய
ஆசிரிய தினத்தில் எமது மனமார்ந்த
நல்வாழ்த்துக்கள்!
வளர்க அவர்தம் இனிய தொண்டு!

பழைய மாணவர் சங்கமும்,
அபிவிருத்திச் சங்கமும்.
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
(சி/13223)



## உளமார
### வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினமான இன்று
கல்விப் பணியைக் கருத்துடன்
ஆற்றி
மாணவச் செல்வங்களை நல்வழி
செலுத்துகின்ற
**அதிபர், உப அதிபர்**
மற்றும்
**ஆசிரியப் பெருந்தகைகள்**
அனைவரும்
நீடுழி வாழ உளமார
வாழ்த்துகின்றோம்!
யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
பழைய மாணவர் சங்கமும்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்.
(சி/13222)


## முதியோர் கௌரவிப்பு

சண்டிலிப்பாய், ஒக். 6
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற முதியோர் தின விழாவில் 35 முதியவர்கள் கௌரவிக்கப் பட்டனர். அவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய்ச் சந்தியிலிருந்து இம் முதியவர்கள் பான்ட் வாத்தியம் இசைக்க பிரதேச செயலகத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அதனை அடுத்து பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் விழா ஆரம்பமாகியது. பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். முதியவர்களுக்கு மலர் மாலை அளிக்கப்பட்டு சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன.

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(ஐ-135)

## ஆரம்ப விழா

கொழும்புத்துறை, ஒக். 6
யாழ். சத்யசாயி மனித மேம்பாட்டு கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் ஆரம்ப விழாவும், பயிற்சிநெறி ஆரம்பமும் யாழ். ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறும் என்று பயிற்சி நிலையச் செயலாளர் கே. வி. சிவனேசன் தெரிவித்துள்ளார்.

அங்குரார்ப்பண உரையை வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர் வி. சேனாதிராசாவும், மதிப்புரையை யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளையும், அறிமுக உரையை பேராசிரியர் சி. சிவஞானசுந்தரமும் நிகழ்த்துவர்.

இதனைத் தொடர்ந்து பயிற்சிகள் ஆரம்பமாகி நடைபெறும்.

(ஐ-30)

## தென்மராட்சி மாணவர்களின் பெறுபேறு

தென்மராட்சி, ஒக். 6
தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளன.

அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். [ஐ-117]

## கசிப்பு வேட்டை

யாழ்ப்பாணம், ஒக். 6
திருநெல்வேலிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டிருந்த சிலரின் வீடுகளுக்குச் சென்ற மதுவரி உத்தியோகத்தர் தலைமையிலான குழு ஒன்று அவற்றைப் பறிமுதல் செய்தது.

கடந்த 22 ஆம் திகதி மதுவரி உத்தியோகத்தர் செந்தூர்ச்செல்வன், கிராமசேவை அலுவலர் க. நித்தியானந்தன் மற்றும் அப்பகுதி சனசமூக நிலைய உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரே மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது திருநெல்வேலி பாரதி புலம், மகாத்மாஜி, கிராம விஸ்தரிப்பு நிலையப் பகுதிகளைச் சேர்ந்த சில வீடுகளிலிருந்து 8 லீற்றர் கசிப்பு மற்றும் 40 லீற்றர் கோடா என்பன பறிமுதல் செய்யப்பட்டன. (ஐ-10)


## வெளிவந்து விட்டது!

பூகோள சுற்றாடற் பிரச்சினைகள்
ஆசிரியர்: பொ. அமிர்தலிங்கம்
B.A (Gey.) Dip in Edu.
விலை 70/-
வெளியீடு
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/113, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(79059)



யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை
ஆனைக்கோட்டை
## பாராட்டுகின்றோம்

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாகிய

செல்வன். த. அஜித்சன்
செல்வி. ம. ஜெனனி
செல்வி. சி. அநுசலா

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(79126) - பாடசாலைச் சமூகம்



## வாழ்த்துகின்றோம்
### உலக ஆசிரியர் தினம் - 2000

யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

யா/ யூனியன் கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்துக்கொண்டிருக்கும் ஆசிரியப் பெருமக்களையும், அதிபர், பிரதி அதிபர்களையும் கடந்த காலங்களில் கடமையாற்றிய ஆசிரியர்கள், அதிபர்களையும் இன்றைய தினம் மனதார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இதில்பழைய மாணவர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.
- நன்றி -

பழைய மாணவர் சங்கம்,
யா/ யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.
(79109) (மருதனார்மடம்)



## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை
## வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினமாம் இன்று யா/ யூனியன் கல்லூரி ஆசிரியர்களது உயர் சேவைதனைப் பாராட்டுவதில் நாம் பெருமகிழ்வெய்துகின்றோம்.

பிற்பகல் 1.00 மணியளவில் பாடசாலையில் நடைபெறும் ஆசிரியர் தினவிழாவில் சகல பெற்றோர்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் செயலாளர்
(79123)



## DEGREE HALL
### [BEACON]

(வெலிங்டன் சந்திக்கு அண்மையில்)

**G. A. Q., 1st in Commerce**
**2001 ஆரம்பம்: 07 - 10 - 2000**
ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| வர்த்தகமும் முகாமைத்துவமும் | — திரு. பசில் |
| பொருளியல் | — திரு. விக்கி |
| கணக்கியல் | — திரு. சிவராஜா |
| வணிக புள்ளிவிவரவியல் | — திரு. தவசேகர் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. ஸ்கந்தவேள் |
| தமிழ் | — பிரபல ஆசிரியர் |
| இந்து நாகரிகம் | — திரு. M. R. |
| மெய்யியல் | — திரு. S.S. மனோகரன் |
| புவியியல் | — திரு. ஞானேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | — திருமதி சுனித்தா |

(79084)



ந.சிறீகாந்தா
(வேட்பாளர் இல.1)

# ★ போரை நிறுத்துங்கள்!

# ★★ புலிகளுடன் பேசுங்கள்!!

# ★★★ தமிழினத்தைத் தன்மானத்துடன் வாழ விடுங்கள்!!!

## இதுதான்


சிங்கள - பௌத்த அரசுக்கு
நாம் திட்டவட்டமாகத் தெரிவிக்கும்

## செய்தி

## இதனை உங்கள் சார்பில் உலகறிய உரத்துக் கூற உங்கள் ஆதரவைத் தாருங்கள்!

**சட்டத்தரணி ந.சிறீகாந்தா தலைமையில்
ரெலோ ஆதரவுடன் போட்டியிடும்
சுயேச்சைக் குழுவை ஆதரியுங்கள்!!**

**வாக்குச் சீட்டில் கடைசியாக உள்ள கப்பல் சின்னத்துக்கு நேரே புள்ளடியிடுங்கள். தொடர்ந்து நீங்கள் விரும்பும் மூன்று வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிடுங்கள்.**



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ~~1~~ | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

*"ஈனப் பிறவிகள் சிலர் இனத்தை விற்பினும்
மானத் தமிழினம் மண்டியிடாது!"*

(78914)

## வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும்

**திரு. கு. மனோகரன்**
**திரு. வீ. ரகுமார்**

ஆகியோரை வாழ்த்துகின்றோம்.
இவர்களது கல்விச் சிறப்புக்கள் அதிகரிக்க இறைவனை வேண்டுகின்றோம்.

உதயதாரகை கல்விக் கழகம்
கொற்றாவத்தை.
(79089)

---

இன்று வெள்ளிவிழா கொண்டாடும்

## தேவி அச்சகத்தினரை

பொன்விழா காண
உளமார வாழ்த்துபவர்கள்

**கேரளா தயாரிப்பாளர்**
(கேரளா பப்படம்)
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
(79072)

---

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான மதிப்பிற்குரிய

**S.T.B. இராஜேஸ்வரன அவர்கள்**

புவியியற்றுறையில் கலாநிதிப்பட்டம் பெற்றமையயிட்டு அவர் நீடுழிகாலம் சிறப்போடு வாழ வேண்டும் என எல்லாம் வல்ல கடையிற் சுவாமிகளின் அருளை வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

(79073) மாணவி கா. ஜெயாமதி.

---

## வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினமான இன்றைய நாளிலே
சுடர்விடும் அகல் விளக்குச் சோதியாய்
இருந்து எம்மை நல்வழிப்படுத்துகின்ற
அதிபர், உபஅதிபர், விரிவுரையாளர்கள்
*அனைவரும் இறையருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.*

ஆசிரிய மாணவர்கள்,
இந்து சமய நெறி - 2 ஆம் வருடம்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.
(79063)

---

### மிலேனியம் ஆண்டில்

## மகாஜன மைந்தர்கள்

யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பயின்று யாழ்.பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்பில் சிறப்புப்பட்டம் பெற்று இன்று விழாக்காணும் எமது மைந்தர்கள்

| | | |
|---|---|---|
| ஏ. சாந்தரூபி | (நிர்வாகமாணி) | B.BA. |
| ம. மைதிலி | (நிர்வாகமாணி) | B.BA. |
| ஸ். ரமேஸ் | (வணிகமாணி) | B.Com. |
| ஜீ. பகீரதி | (கலைமாணி) | B.A. |
| வி. சுபாஜினி | (விஞ்ஞானமாணி) | B.Sc. |

*ஆகியோரையும் மற்றும் இன்று பட்டம் பெறும் ஏனைய மகாஜன மைந்தர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம.*

*யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.*
மகாஜனச் சமூகம்
(79094)

---

**யா/அருணோதயக் கல்லூரி அளவெட்டி**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| செல்வன் க. பிரணவன் | 149 |
| செல்வன் இ. தனுஷன் | 149 |
| செல்வி உ. கேதாரணி | 147 |
| செல்வன் இ. பிரணவா | 141 |
| செல்வி க. சர்மினி | 137 |

மேற்படி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் அவர்களுக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
*யா/அருணோதயக் கல்லூரி.*
(79114)

---

## வாராந்த நிகழ்வுகள்

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணியளவில பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கான அறிமுகவுரையை இளைப்பாறிய அதிபர் சீ. வைகுந்தசாமி நிகழ்த்துவார்.

யாழ் இரா.செல்வவடிவேல் 'பக்தி நெறி' என்றதலைப்பில் சமயச சொற்பொழிவு நிகழ்த்துவார்.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஐ-30)

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஒக்.6

மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிறன்று வலிகாமம் வலயத் தமிழ் ஆசிரியர்களுக்கான 'கவிதை திறன்' கருத்தரங்கு நடைபெற உள்ளது.

தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களின் இக்கருத்தரங்கின் உச்சப் பயனைப் பெறத்தக்க ஆசிரியரை கருத்தரங்கிற்கு அனுப்பி வைக்குமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ-152)

* * *

வலிகாமம் கல்வி வலையத்தில் உடற்கல்வி (சதுரங்கம்) பற்றிய சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் நாளை சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற உள்ளன. (ஐ-152)

* * *

ஆசிரிய நிலையம் நடத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான விசேடதர உயர்கருத்தரங்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் எதிர்வரும் 8,12,13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

(முன்னர் வலுவூட்டல் கருத்தரங்கில் பங்கு பற்றாத பொருத்தமான ஓர் ஆசிரியரை அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலய உதவி கல்விப்பணிப்பாளர் திருமதி கோ.ம.கேந்திரராசா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-152)

---

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

## உலக ஆசிரியர் தினம்

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"

எம்மினிய அதிபர், ஆசிரியர்களையும் மற்றும் உலக ஆசிரியர் அனைவரையும் இந்நன்னாளில் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
பாட சாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
(13198)

---

## கொக்குவில் இந்துக்கல்லூரி

மாணவ முத்துக்களின் வாழ்வை வளமாக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைக்கும்

**ஆசிரியப் பெருமக்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.**

*எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நல்லாசான்களே! தாங்களும் தங்கள் குடும்பமும் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்று ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(இன்று 06-10-2000 நடைபெறும்ஆசிரியர் தினத்தில் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் பங்குபற்றி எமது கல்லூரி அதிபரையும் ஆசிரியர்களையும் வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.)

**கொக்குவில் இந்து எமதே!**
(C/13208)

---

மில்லேனியத்தில்...

## அகவை ஒன்று

நீர்வேலியைச் சேர்ந்த
**கிருஸ்ணதாசன் – சுதர்ஷினி** *தம்பதியினரின்*
அருந்தவப் புதல்வன்



## செல்வன் கி.விதுனன்

முதலாவது பிறந்த நாளை நீர்வேலியிலுள்ள தனது இல்லத்தில் இன்று (06-10-2000) வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

*செல்வன் விதுனனை* அன்பு அப்பா, அம்மா, அக்காமார், தனோஜா, டினோஜா, அப்பப்பா, அப்பம்மா, மாமா, அத்தை, மச்சான்மார் - நிசோபன், நிதுர்ஷன், சுவிஸிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, தங்கை டிலக்சா, ஆசைச்சித்தப்பா (வேல் முருகன் - ஸ்ரோர்ஸ்), கேகாலையில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமாமார் - சுபாஸ்கரன், சுஜீவன், சுவிஸிலிருக்கும் பெரியப்பா - பெரியம்மா, ஜேர்மனியிலிருக்கும் மாமா சுதர்ஷன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் விநாயகர், நாச்சிமார் திருவருளுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இ. கிருஸ்ணதாசன்
(அப்பா)

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*
(78994)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 10.10.2000

- 50 ஆண்டுகளாகியும் இந்தநாட்டில் எரிந்துகொண்டிருக்கின்ற இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை.
  - ❏ ஆட்சிப்பீடங்களில் அமர்ந்து கொள்வதற்காக மாறிமாறி வரும் சிங்கள அரசுகள் போரை நடத்திக் கொண்டிருக்கின்றன.
  - ❏ 17 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சி யாழ்.நூலகத்தை எரித்தது முதல் இனக் கலவரங்களைத் தூண்டி தமிழ் மக்களை அழித்ததுவரை - கடந்த ஆறு ஆண்டுகளிலும் தமிழர்களுக்கு அற்ப சொற்ப உரிமைகளைக் கூட வழங்க மறுத்து பேரினவாத பௌத்த பீடங்களுடன் கைகோர்த்து நிற்கின்றது.




  - ❏ தமிழர் தலைவராயிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஜனநாயக வழிகளில் தமிழர் சம உரிமைக்காக வாதாடினார்.



  - ❏ தந்தை செல்வநாயகம் தமிழர் ஆட்சி உரிமைக்காக மக்களைத் திரட்டி அறவழிப் போராட்டங்களை நடத்தினார்.
  - ❏ தந்தை செல்வா வழியில் இந்த விடுதலை இயக்கத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முன்னெடுத்துச் சென்று வாதாடியவர், போராடியவர் தலைவர் அமிர் தலிங்கம்.



- ஜனநாயக இயக்கத்துக்கு, மக்கள் போராட்டங்களுக்குக் கிடைத்த பதில் - அவசரகாலச் சட்டங்களால், இராணுவ அடக்கு முறைகளால் இனக்கலவரங்களால் தமிழினம் அடககப்பட்டது; ஒடுக்கப்பட்டது.
- இதன் விளைவுதான் கடந்த இரு தசாப்தங்களாக நாட்டையும் இனங்களையும் அழித துக் கொண்டிருக்கும் ஆயுதப் போர் - 60,000 தமிழர்களைப் பலி கொண்டது இப்போர்.
- இதற்குப் பின்னரும் இந்த ஆறு ஆண்டுகளில்.....
  - ❏ இந்தக் கொடிய போரை நடத்திக்கொண்டிருப்பதற்கு ஏதுவாக அவசரகாலச் சட்டம் ஒவ்வொரு மாதமும் நீடிக்கப்படுகிறது. இந்தச் சட்டமே கொடியதுதான்.
  - ❏ ஆயுதப் படைகளுக்கும், பொலீஸாருக்கும் ஏகபோக அதிகாரங்களை வழங்குகிறது இச்சட்டம்.
  - ❏ இவர்கள்முன் தமிழ் மக்கள் அனைவருமே சந்தேகப் பிராணிகள் அல்லது புலிகள் என எண்ணத் தூண்டுகிறது இச்சட்டம்.
  - ❏ இலங்கை முழுவதுமே பெண்கள் உட்பட தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுகிறார்கள; காவலில் வைக்கப்படுகிறார்கள்; சித்திரவதைக்கும், அவமானங்களுக்கும் உள்ளாகிறார்கள்.
  - ❏ களுத்துறை, பூசா முகாம்களலும், காவல் நிலையங்களிலும் நீதி விசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள்.
  - ❏ ஆயுதப் படைகளினால் கொல்லப்படுபவர்களுக்குப் பிரேத பரிசோதனை, மரண விசாரணை இல்லை; நட்டஈடேயில்லை; அழிக்கப்படும் சொத்துக்களுக்கோ, விவசாயத்துக்கோ, தொழில்துறைக்கோ அன்றித் தொழில் இழப்போருக்கோதானும் இழப்பீடில்லை.
  - ❏ 1995க்குப் பின் யாழ்ப்பாணத்தில் 600பேரைக் கைதுகளுக்குப்பின் காணவில்லை. செம்மணி உட்பட பல இடங்களில் புதைகுழிகளில் எலும்புக் கூடுகளாய்.....
  - ❏ சுண்டுக்குளி மாணவி கிருஷாந்தி முதல், புங்குடுதீவு இளம் குடும்பப் பெண் சாரதாம்பாள் வரை பாலயல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட கொடுமைகள்.
  - ❏ மாணவ சமுதாயத்தை அச்சுறுத்தும் கல்லூரி மாணவர்கள் நிரோஜன், சஞ்சீவன் கொலைகள்.
  - ❏ தென்மராட்சியில் குண்டுவீச்சுக்குப் பலியாகிய 300 அப்பாவித் தமிழர்கள், 1000 அப்பாவிகள் படுகாயமடைந்தனர்.
  - ❏ இற்றைவரை 9 லட்சம் தமிழ்க் குழந்தைகள் உளரீதியில் இப்போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
  - ❏ இவை எல்லாம் புலிகளுக்கெதிரான போரா? அல்லது சமாதானத்துக்கான போரா? சிந்தித்துப்பாருங்கள்.
- இத்தனைக்கும் மத்தியில் புதிய பிரதமர் ஆனையிறவைத் தேர்தலுக்கு முன் கைப்பற்றுவோம் எனப போர்ப் பிரகடனம் செய்துள்ளார். “பௌத்த பீடங்களுடன் பேசித்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு” என்கிறார். பௌத்த பீடங்களோ “இராணுவத் தீர்வுதான்” என்கின்றன.
- **இக்கொடிய போரை நடத்துவதற்கு, தமிழர் உரிமைகளை அடக்குவதற்கு, மனித உரிமைகளை மீறுவதற்கு வழிவகுக்கும் அவசரகாலச் சட்டங்களை, பாதுகாப்பு நிதி ஒதுக்கீடுகளை, இந்த அரசை மனித நேயமுள்ள எந்த மனிதனாவது ஆதரிப்பானா?**
  - ❏ ஜே.வி.பி. எதிர்த்து வாக்களிக்கிறது.
  - ❏ ஐ.தே.கட்சி ஆதரிப்பதில்லை.
- தமிழர் பிரதிநிதிகளாம் வீணைக்கொடியவர் நிரந்தரமாகவே ஆதரித்து, வாக்களிக்கின்றார். ஏன்?
- அவசரகாலச் சட்டத்தை, பாதுகாப்பு நிதி ஒதுக்கீடுகளை, வரவு - செலவுத்திட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்து வாக்களிக்கிறது.



## தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரியுங்கள்! - வெற்றிபெறச் செய்யுங்கள்!!

# பருத்தித்துறை பிரதேச சபை
# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)
# நடைபெற்ற வேலைத் திட்டங்கள் 1999 - 2000



மக்களால் தெரிவு செய்யப்பட்ட எமது கட்சியானது எமது செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழி நடத்தலின் மூலமும் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (ஜெகன்) அவர்களின் ஊக்கத்தினால் எமது கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சபையின் உப தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்க ளினது ஒத்துழைப்போடும் எமது பிரதேச மக்களது மனப்பூர்வமான ஆதர வோடும் உள்ளூராட்சி சபைகள் மூலம் மக்களின் தேவைகளை இனங்கண்டு சேவையாற்றி வருகின்றோம். இக்கட்டான பல அசாதாரண சூழ்நிலையிலும் என் மீது இரு தடவைகள் கொலை முயற்சி மத்தியிலும் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற உயர் வாக்குக்கு இணங்க எமது சேவையினை வழங்கி வருவதை தாங்கள் அறிவீர்கள். இந்த வகை யில் எமது சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களை தங்கள் முன் சமர்ப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம்.

**பரஞ்சோதி இரவீந்திரன்**
**(உப தலைவர்)**
**பருத்தித்துறை பிரதேச சபை.**

என்றும் தங்கள் சேவைக்குரிய சேவகன்
**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்** (ஜே.பி.யு.எம்.)
(தலைவர்)
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

## 1999 - 2000ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேலை விவரங்கள்

### விசேட மூலதன நிதி - 1999

01. தென்னை நடுகை செய்யப்பட்டது 190,000.00
02. கம்பன் சனசமூக நிலைய புனரமைப்பு 80,000.00
03. பூமகள் சனசமூக நிலைய புனரமைப்பு 70,000.00
04. பெரிய தேவனத்தாய் சனசமூக நிலைய புனரமைப்பு 70,000.00
05. நாகர்கோயில் வடக்கு மீன் சந்தை அமைத்தல் 300,000.00
06. புற்றளை பாலர் பாடசாலை அமைத்தல் 180,000.00
07. புலோலி இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை அமைத்தல் 500,000.00

### பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி - 1999

01. வத்தனை பாலர் பாடசாலை புனரமைப்பு 75,000.00
02. வல்லிபுரம் குருக்கட்டு பொது மலசலகூடம் அமைத்தல் 150,000.00
03. குழாய்க்கிணறு அமைத்தல் மாணான்டிச்சந்தை 75,000.00
04. இலட்சுமணன் தோட்ட வீதி திருத்தம் 100,000.00
05. மாமுனை மீன் சந்தை அமைத்தல் 100,000.0
06. அம்பன் பொதுக் கிணறு அமைத்தல் 10,000.00
07. குடத்தனை கரையூர் மதகு புனரமைத்தல் 200,000.00
08. புலோலி பொது நூலக புத்தகம் கொள்வனவு 25,000.00
09. குடத்தனை பொது நூலக புத்தகம் கொள்வனவு 25,000.00

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 1999

01. இலங்கேஸ்வரன் சனசமூக நிலையம் புனரமைப்பு துறையாமூலை 75,000.00
02. திருநாவலூர் சனசமூகநிலையம் புனரமைப்பு 25,000.00

### சபை நிதி - 1999

01. புலோலி பொது நூலகம் தீந்தை அடித்தல் 100,000.00
02. ஆனைவிழுந்தான் சுடலை புனரமைப்பு, ஆனைவிழுந்தான் 63,000.00
03. குடத்தனை ஆயிலடி வீதி திருத்தம், குடத்தனை 80,000.00
04. குடத்தனை உபஅலுவலகத்துக்கும் பொது நுலகத்துக்கும் வெள்ளை அடித்தல் 75,000.00
05. அலுவலக உபகரணம் கொள்வனவு 10,000.00

## 2000ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட, நிறைவேற்றப்படவுள்ள வேலை விவரங்கள்

### பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி - 2000

| வேலை விவரம் | ஒதுக்கீடு |
|---|---|
| 01. பிரதேச சபை முன் வீதி புனரமைப்பு புலோலி | 100,000.00 |
| 02. புலோலி பொது நூல் நிலைய புத்தகக் கொள்வனவு | 50,000.00 |
| 03 பொதுக் கிணறு அமைத்தல், குடத்தனை | 25,000.00 |
| 04. குடத்தனை கரிக்கோப்பு வீதி திருத்தம், குடத்தனை | 250,000.00 |
| 05. குடத்தனை கிராமக் கோடு வீதி திருத்தம், குடத்தனை | 200,000.00 |
| 06. மணற்காடு மீன் சந்தை அமைத்தல், மணற்காடு | 200,000.00 |
| 07. பொற்பதி மீன் சந்தை அமைத்தல், பொற்பதி | 225,000.00 |
| 08. வல்லிபுரம் திறந்த கிணறு அமைத்தல், வல்லிபுரம் | 150,000.00 |
| 09. அல்வாய் மேற்கு மாதா கோயில் வீதி திருத்தம், அல்வாய் | 150,000.00 |
| 10. குடத்தனை குளவெளி தாமரைக்குளம் திருத்தம், குடத்தனை | 50,000.00 |
| 11. புலோலிப் பகுதியில் 5 குழாய்க்கிணறு புனரமைத்தல் | 50,000.00 |
| 12. மாயக்கை குளம் புனரமைப்பு, மாயக்கை | 50,000.00 |
| 13. புளியங்காயன் குளம் புனரமைப்பு, துன்னாலை | 50,000.00 |
| 14. குடத்தனை நூல்நிலையம் - நூல்கள் கொள்வனவு | 50,000.00 |

### சபைநிதி

01. அலுவலக பின்மதிலும் களஞ்சிய அறையும் அமைத்தல் 81,000.00
02. ஆண்டிப்பனை வீதி திருத்தம், குடத்தனை 30,000.00
03. கொத்தியாவத்தை பொதுக் கிணறு புனரமைப்பு, புலோலி தெற்கு 11,000.00
04. சுப்பர்மடம் மயானம் புனரமைப்பு, சுப்பர்மடம் 40,000.00
05. சுப்பர்மடம் பொது மலசலகூடம் அமைத்தல், சுப்பர்மடம் 75,000.000
06. பிரதேச சபை காரியாலய உள்ளகக் கண்ணாடி அறை அமைத்தல் 50,000.00
07. பொலிகண்டி அம்பிகை சனசமூகநிலைய குழாய்க்கிணறு திருத்தம் 7,500.00
08. வல்லையானந்தம் தெற்கு வீதி அமைத்தல், துன்னாலை 125,000.00
09. தட்டாதெரு ஒழுங்கை புனரமைப்பு, தும்பளை 100,000.00
10. உருத்திராவத்தை பாலர் பாடசாலை புனரமைத்தல், சந்தாதோட்டம் 100,000.00

### விசேட நிதி

01. களசிட்டி வீதி திருத்தம், புலோலி 700,000.00

### விசேட மூலதன நிதி

01. புலோலியில் கடைகள் அமைத்தல் 100,000.00

## புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை - 2000 ஆர்.ஆர்.ஏ.என். - 3,000,000.00

01. குரும்பைகட்டி வீதி புனரமைத்தல், குரும்பைகட்டி 350,000.00
02. சண்டாங்கி வீதி புனரமைத்தல், புலோலி மேற்கு 400,000.00
03. யோதரவு மட வீதி புனரமைத்தல் மாயக்கிராமன் 300,000.00
04. குடத்தனை வடக்கு வீதி புனரமைத்தல், குடத்தனை 450,000.00
05. நிக்கம் வவுனில் வீதி புனரமைத்தல், திக்கம் 250,000.00
06. கெருடாவில் மாதா சங்க வீதி புனரமைத்தல், கெருடாவில் 250,000.00
07. கூவில் வீதி புனரமைத்தல், கூவில் 300,000.00
08. திக்கிரி வீதி புனரமைப்பு, திக்கிரி 300,000.00
09. திக்கம் மாறம்புல வீதி புனரமைத்தல், அல்வாய் மேற்கு 140,000.00

### பி.எஸ்.டி.ஜி. வேலை - 2000

01. கெருடாவில் பகுதியில் புதிய மின் விநியோகம் 300,000.00

(C/13/2011)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அகிலா தம்பிஐயா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.80 600263 1v) கொக்குவிலுக்கும தெல்லிப் பழை உதவிஅரசஅதிபர்பணிமனைக் கும் இடையில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் பொ.சமரகொடி, 42, இந்துக் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன் மானம் வழங்கப்படும். (79111)

சி. சரவணபவானந்தன் என்பவரது தேசிய அ.அட்டை (532893127v), விசேட அ.அட்டை இரண்டும் திரு நெல்வேலி சந்தைப்பகுதியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கல்வியங்காடு சந்தையில் உள்ள பிரபா ஸ்ரோர்ஸில் ஒப்ப டைத்து உதவவும். (79135)

### தவறவிடப்பட்ட பாக் (Bag)

முத்துலிங்கம் குணசீலன் என்ப வருடைய புடைவைகள், பல்கலைக் கழக ஆவணங்கள், புகைப்படம் அடங்கிய பாக்(Bag)ஒன்று 5-10-2000 அன்று பருத்தித்துறை துறைமுகத் தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் கள் தயவுசெய்து யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வி அலுவலகத்தில் அல்லது புலவர் வீடியோ, கோண்டா வில் என்ற முகவரியில் ஒப்படைக்க வும். (79146)

### இலகு திருமண சேவை

1963, உத்தரட்டாதி கிரகபாவம் குறைந்த, சுவிஸில் தொழில் புரிபவருக்கு சுவிஸில மணப்பெண் தேவை. 1975, திருவாதிரை **Australia** வில் பட்டம் பெற்று (பரத நாட்டிய கலையுடன்), **Computer Programmer** வேலை செய்யும் மணப்பெண்ணுக்கு மணமகன் அங்கு தேவை. துரை விமலா, **K.K.S.** வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (78834)

### வாழ்க்கைத் துணைவிகள் தேவை

தாரமில்லாத இந்து 54 வயது ஓய்வூதியர் இருவருக்கு வாழ்க்கைத் துணைவிகள் தேவை. தனிப்பட்ட மருத்துவத் தொழில் செய்பவர்களா தலால், உதவக்கூடிய அனுபவமுள் ளவர்கள் விரும்பத்தக்கது. சாதி குலம் கவனிக்கப்படமாட்டாது. தொடர்பு: குரு சன்னிதானம், ஸ்ரீராகவேந்திர ம்ருத்திகா, 159, கோயில் வீதி, நல் லூர். (79125)

### தேவை

**BIOLOGICAL DISSECTION SET** விலைக்குத் தேவை. விள.இல. 1111, மே/பா உதயன். (79122)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமை யக் கட்டிக்கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/). தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பா ணம். தொலைபேசி: 3081. (C/13122)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில தபால் மூலமும் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (79038)

### விற்பனைக்கு

**Hero Honda CD** 100ss மோட் டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.67, செட்டித் தெரு, நல்லூர். (79041)

### நினைவு அஞ்சலிக் கூட்டம்

வட்டுக்கோட்டை, ஒக்.6

மகாவித்துவான் நமசிவாய தேசிகரின் மறைவையொட்டி வட்டுக் கோட்டைத் தமிழ்ச்சங்கம், அதன் சித்தன்கேணிப் பணிமனையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நினைவுக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

அத்துடன் சங்க வளர்ச்சிக்கான கலந்துரையாடலும் நடைபெறவிருப் பதாக சங்கச் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் தெரிவித்துள் ளார். (ஐ-ஒ)

---

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
## பாராட்டி வாழ்த்துகிறோம்

அனைத்துலக ஆசிரிய தினமாகிய இன்று எமது கழக சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி நிலையத்தில் தொண்டர் ஆசிரியைகளாகப் பணிபுரியும் கீழ்க்குறிப்பிட்ட பழைய மாணவிகளைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

| | |
|---|---|
| செல்வி. இ. ரமணி (வல்வெட்டி) | ~ தட்டச்சு |
| திருமதி யோ. ஜெயவாணி (அல்வாய்) | ~ தட்டச்சு |
| செல்வி. இ. மாலினி (ஊரிக்காடு) | ~ தமிழ் சுருக்கெழுத்து |
| செல்வி. தி. நிரூபா (சமரபாகு) | ~ தமிழ் சுருக்கெழுத்து |
| செல்வி. சி. விஜயதீபா (வதிரி) | ~ ஆங்கில சுருக்கெழுத்து |

மேலும் எமது கழகத்தில் முன்னர் தொண்டர் ஆசிரியராகக கடமையாற்றிய 65 பேரையும் (இவர்களில் தற்போது வெளிநாடுகளில வசிக்கும் 30 பேர், பல்வேறு அலுவலகங்களில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்ற 28 பேர் உட்பட) பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி, கரவெட்டி. (79137)

---

## யா/அருணோதயக் கல்லூரி
அளவெட்டி
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினத்தில் இன்று அதிபர் ஆசிரியர்கள் அனைவரையும் சகல சீரும் சிறப்பும் பெற்று வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(79115) - பழைய மாணவர் சங்கம்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்


| | |
|---|---|
| (1) செல்வி வி.கங்கா | 143 புள்ளிகள் |
| (2) செல்வி து. மோகனப்பிரியா | 143 புள்ளிகள் |

கற்பித்த ஆசிரியர்கள்:
செல்வி. வி.மகேஸ்வரி
திருமதி வ.கலாவதி
திருமதி பா.சிவநேசமலர்

அதிபர், ஆசிரியர்கள்,
(79117) பா.அ.சங்கம், பழைய மாணவர் சங்கம்.

---

## மறைந்தும் மறையாத மாணிக்கமே
## பிறந்தநாள் வாழ்த்துக்களுடன்
## 13 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 - 10 - 1961 | 24 - 09 - 2000 |

அமரர்
### வீரசிங்கம் உதயகுமார் (B.Sc.)
(ஆசிரியர், யா/புனித அந்தோனியார் கல்லூரி)

இன்றைக்கு உங்கள் உதயநாள்
இன்பத்தோடு இனிய வாழ்த்துகள் கூறி
இதயம் மகிழ்வதற்கு இனியவனே நீங்களில்லை!
சுழலும் நெஞ்சோடு வாழ்த்துக்கள் சொல்லவைத்து - என்னை
சுமையாக வாழவிட்டு சுகவானே எங்கு சென்றீர்?
கரம்பிடித்த நாள் முதலாய் வழிகாட்டி நின்றவரே - என்
விழிசிந்தும் நீருக்கு விடைபகர மாட்டீரோ?
காலமெலாம் ஒன்றாக வாழ்வோமென - நாம்
கண்டிருந்த கனவுகளைக் கலைத்துவிட்டு
நித்தம் நினைத்தெம் சித்தங் கலங்கவைத்து
நீண்ட வழி சென்றதும் நியாயமாய்யா!
அப்பாவின் முகந்தேடித் தேம்பியழுங் குழந்தைகளை
ஆற்ற முடியவில்லை அப்பா! தேற்ற முடியவில்லை!
சொந்தமாய் அவர்கள் ஒரு வார்த்தை எழுதுமுன்னே
சோகமாய் மகிழ்வின் அத்தியாயமே முடிந்துவிட்டதையா!
மறு பிறப் பொன்றிருந்தால் மறுபடியும் என்கரம்பற்றி - எம்
கண்மணிகளோடு காலத்தைக் கழிக்கவேண்டும்.
உற்றாரும் உறவினரும் உருகித்தவிக்கின்றார்
உறவுகளைத் தவிக்கவிட்டு உத்தமனே எங்கு சென்றீர்.
உயர்வானின் திருவடியில் உத்தமனே நீரமர்ந்து
தயவுபெற அஞ்சலித்து வாழ்த்துகின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சந்தை அருகில்,
கல்வியங்காடு.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள். (79107)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 06 - 1941 | 06 - 09 - 2000 |

### திருமதி தேசிங்கம் அன்னலட்சுமி

06.09.2000 அன்று சிவபதமடைந்த எங்கள அன்புத்தெய்வம் திருமதி தேசிங்கம் அன்னலட்சுமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.10.2000) வெள்ளிக்கிழமை காலை எங்கள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'லட்சுமி பவனம்'*
*கொட்டைக்காடு,*
*கரணவாய் மேற்கு,*
*கரவெட்டி.* (79064)

குடும்பத்தினர்.

---

## நான்காம் ஆண்டு இதயாஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 - 03 - 1936 | 06 - 10 - 1996 |

### அமரர் வை.சுந்தரலிங்கம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம், வலயம்-1)

சிந்தைதனில் நின்நிறைமுகம் துலங்கிட
நெஞ்சமதில் உம் வழிகாட்டல் நின்றிட
சொல்லாலும் செயலாலும் தூய்மையுடன் செயலாற்றி
அன்பினால் அரவணைத்து அறிவாற்றல் அளித்தீரே!
நான்காண்டு சென்றதுவே உம் ஒளி நீங்கி
நாம் முளைவிட்டு தளிர்விட்டு விருட்சமாகும் - வேளையில்...
அப்பா! காலனவன் பறித்தானோ உம்முயிரை?
கலங்கி நிற்கின்றோம் செய்வதறியாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

*மானிப்பாய்.* (79074)

மனைவி,பிள்ளைகள்,
சகோதரர்கள்.

---

## நினைவில் நீங்கா
## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 - 02 - 1924 | 18 - 10 - 1999 |

### அமரர் இளையதம்பி பரமசாமி
(ஓய்வுபெற்ற நடத்துநர் இ.போ.ச., சரசாலை வடக்கு, சாவகச்சேரி)

திதி : 06-10-2000

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்
மறைந்து ஆண்டு ஒன்று ஆனதே!
உங்கள் அன்பும் பரிவும் பாசமும்
எமது நெஞ்சைவிட்டு அகலாது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*நெடியவி லேன்,*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(c/13171)

# யாழ்.மாவட்டம் - பொதுத் தேர்தல் - 2000



கோப்பாய் கோமான்
கு.வன்னியசிங்கம்



(தமிழரசு)
க.சின்னத்துரை

அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
எனது அரசியல் நண்பர்களே!
உதய சூரியனுக்கு ☒ இட்டு
தமிழர் விடுதலைக் கூட்டணியை
வெற்றி பெறச் செய்யுங்கள்

| | |
|---|---|
| | X |
| க.சின்னத்துரை | 10 |

எனது இலக்கமான 10 க்கு மேலே
புள்ளடி இட்டு ஆதரியுங்கள்.
உங்கள் ஆதரவை வேண்டி நிற்கும்
(தமிழரசு) க.சின்னத்துரை
உப தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி.



மூதறிஞர்
சா.ஜே.வே.செல்வநாயகம் Q.C.

(78920)


## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.6

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

- கந்தையா கிருபானந்தக் குருக்கள், (கிராம்புவில், சாவகச்சேரி.)
- ஜீவநாதன் தங்கமலை ('பொன் இல்லம்', மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.)
- முருகேசு தங்கராசா, (மீசாலை வடக்கு, மீசாலை.)
- வெற்றிவேலு இரத்தினம், (அளபிட்டி ஒழுங்கை, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.)
- ஜோசப் பீற்றர் ஜேசுராசா, (மட்டுவில் தெற்கு, சாவகச் சேரி.)
- கருணா மகேந்திரநாதன், (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.)
- மகேந்திரன் கனகசபை (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.)
- உதயராணி பாக்கியராசா (74, குகன் வீதி, அரியாலை).

(ஐ)


# நாடாளுமன்ற தேர்தல் 2000.10.10 - யாழ்.தேர்தல் மாவட்டம்







*அன்புமிக்க யாழ்.மாவட்டவாக்காளப் பெருமக்களுக்கு!*

எதிர்வரும் ஒக்ரோபர் 10இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்து அமோக வெற்றியினைப் பெற்றுக் கொடுக்க தீர்மானித்து விட்டீர்கள் என்பதை அறிந்து பெருமிதம் அடைகின்றோம்.

உதய சூரியனுக்கு [சின்னம்] நேரே புள்ளடியிட்டு ☒ இனவிரோத தீய சக்திகளை தமிழ்மண்ணிலிருந்து அகற்றிட நீங்கள் எடுத்த முடிவு தமிழ் இனத்தின் விடிவிற்கான முடிவு. உங்கள் பணிஇத்துடன் முடிந்து விடவில்லை.

தந்தை செல்வா, அண்ணன் அமிர், பெரியார்சிவா என்போரின் இணையற்ற தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மக்கள் இயக்கமாக வளர்ச்சி பெற்றது. தமிழ் இனத்தின் இதயத்தில் நம்பிக்கையான இடத்தைப் பெற்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தலைவர் சிவசிதம்பரம் நோயுற்றிருந்தவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் **தலைமைப் பணிகளை** பொறுப்பேற்று மிகத் திறமையாகச் செயற்பட்ட திரு.வீ.ஆனந்தசங்கரி பல சிக்கலான கட்டங்களில் **சுய நோக்கு** அறவே இல்லாது, முக்கிய முடிவுகளை எடுக்க முன்னின்று உதவியமை அவரது உயர் **தலைமைத்துவப்பண்புகளை** வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள்.

இன்று திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் பன்னிருவர் (12) தேர்தல் களத்தில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக போட்டியிடுகிறார்கள். தொடர்ந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பணிகளை பொறுப்புடன் ஆற்றத் தேவையான வலிமையைத் திரு.ஆனந்தசங்கரி அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உயரிய பணி யாழ்.மாவட்ட வாக்களப் பெருமக்களுக்குண்டு.

**இப்பணியை நிறைவேற்ற, ஒக்ரோபர் 10ஆம் நாள் நீங்கள் அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியனுக்கு நேரே புள்ளடியிட்டு உங்கள் விருப்புவாக்குகளில் ஒன்றை தலைமை வேட்பாளர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களின் வேட்பாளர் இலக்கம் இரண்டிற்கு மேல் புள்ளடியிட்டு ( ☒ ) அவருக்கு அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்து, தமிழர் விடுதலை கூட்டணியின் முழுநேரத் தொண்டனாக அவர் தொடர்ந்தும் பணியாற்ற உதவ வேண்டுகின்றோம்.**

*மறவாதீர்கள்! இது உங்கள் புனிதப் பணி!!*

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | X | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | 11 | 12 | | | | | | | | |

(78938)

நன்றியுடன்,
யாழ்.மாவட்ட வாக்களர்கள்.

# அமரர்களாகிவிட்ட ஆசிரியத் தெய்வங்களை நினைவு கூர்ந்து அவர் வழி செல்வோம்!

**இன்று ஆசிரியர் தினம் அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

★ ஆசிரியர் தினம் — தம்மைப் பிழிந்து சாறாக்கி மாணவர்களுக்கு ஊட்டச்சத்தாக வழங்கும் உத்தமர்கள் தினம்.

★ ஆசிரியர் தினம் — சேவையே இலட்சியமாகக் கொண்ட தியாகிகளின் தினம்.

சமுதாயத்தின் விழுமியங்களாகத் திகழ்பவர்கள் ஆசிரியர்களும் மருத்துவர்களும் ஆவர். உலகத் தொழில்களில் சேவையாகக் கருதப்


**இரா. செல்வவடிவேல்**

படுவது ஆசிரியத் தொழிலும் மருத்துவமும் தான். சமுதாயத்தின் முதல் வணக்கம் ஆசிரியர்களுக்குத் தான்; காரணம் மருத்துவர்களை உருவாக்குவது ஆசிரியர்களன்றோ!

ஒளவைப் பாட்டி ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்றார். தனி மனிதன் ஒவ்வொருவரதும் கண்களுக்கு ஒளி கொடுத்து சமுதாயத்தில் நற்பிரஜையாக நடப்பதற்கு வழிகாட்டி நிற்கும் உத்தமர்கள் தான் ஆசிரியர்கள். நல்லாசான்களாகத் திகழ்பவர்கள், கடமையை உயிராகக்கருதி வாழ்பவர்கள். காலை ஆறு மணிக்கு பாடசாலைக்கு வருகை தந்து மாணவர்களையும் வரச்செய்து முதல் நாள் கொடுக்கப்பட்ட வேலைகளைத்திருத்தம் செய்யும் ஆசிரியர்கள் இருக்கிறார்களா? பாடசாலை நேரத்தில் செய்வன திருந்தச் செய்து மாலையிலும் மாணவர் நலன் பேணி வாழும் ஆசிரியர்கள் இருக்கிறார்களா? தம் ஆசிரியத் தொழிலில் அரைநாள் மட்டும் லீவு எடுத்த கடமையாளர்கள் இருக்கிறார்களா? இருந்திருக்கிறார்கள், இன்றும் அங்கொன்று இங்கொன்றாக இருக்கிறார்கள், அவர்களே ஆசிரியத் தெய்வங்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரிய தீபமாகத் திகழ்ந்த பண்டிதர் செல்லத்துரை ஐயா அவர்கள் ஆசிரிய தெய்வமாகத் திகழ்ந்தவர்.

இன்று ஆசிரியர்களின் நிலை என்ன?

அமரராகி விட்ட ஆசிரியத் தெய்வங்கள் வாழ்ந்து காட்டிய தடத்தில் செல்கின்றோமா? சிந்தனை செய்யுங்கள்! ஆசிரியர்கள் சுயநலமே உருக் கொண்டதுபோல ஆகி வருகிறார்கள் என்பது கசப்பான உண்மை. ஆசிரியர்கள் தம் தகைமையை உயர்த்துவது—சம்பள உயர்வு ஒன்றையே பெரும்பாலும் நோக்கமாகக்கொண்டிருப்பது நல்லதல்ல. தகைமைஉயர்த்தப்பட



வேண்டும் என்பதில் எவ்வித மறுப்புமில்லை. ஆனால் மாணவர்களுக்குச் செய்ய வேண்டியவற்றை மறந்து விடுவதுதான் வேதனையானது.

அண்மையில் அமரராகிய இலக்கண வித்தகர் அவர்கள் ''நான் ஆசிரியனாக வாழ்பவன், மாணவர்களுக்குக் கல்வி ஊட்டுவதுதான் எனது கடமை. எழுதுவதற்கு எல்லாம் எனக்கு நேரமில்லை'' என்று கூறியது நினைவிற்கு வருகிறது.

கல்வியின் இலக்குக் கற்பிக்கும் ஆசிரியரையே மிகுதியும் சார்ந்திருக்கிறது; கற்பிக்கும் ஆசிரியரிடம் மிகுந்த திறன் இல்லையானால் பாடசாலைகளில் விளையும் நன்மையை விடத் தீமைகளும் விபத்துக்களும் குழப்பங்களும் தான் அதிகம் ஏற்படும். வகுப்பறையில் மாணவர்களுக்கு ஆசிரியர் தான் முதல் பாடம் கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியருக்கும் இடையில் மரியாதை கலந்த அன்புடனான உறவு உணர்வு ரீதியாகக் காணப்படுதல் அவசியம். இதற்கு ஆசிரியரின் செயற்பாடே முதன்மையானதாகும் என்பது எனது தாழ்மையான கருத்து.

கற்பிக்கும்ஆசிரியருக்கு தூய இதயம் தேவை. சோவியத் நாட்டு கல்வியாளன் ''ஆசிரியர்களே! குழந்தைகளுக்கு இதயத்தைக் கொடுங்கள்'' என்று எழுதினார்.

கல்வி மூளையோடு மட்டுமோ; கற்கும் நூல்களோடு மட்டுமோ சம்பந்தமுடையதன்று; இதயத்தோடும் சம்பந்தமுடையது. எனவே மாணவர்களுக்கு 'இதயத்தை வழங்கும்' தெய்வங்களாக ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

இன்றைய கல்வியுலகத்தினுடைய தடத்தில் நாம் செல்வதற்கான ஆயத்தம் போதாது. அகன்ற விரிவான உயர்ந்த குறிக்கோளுடைய சிறந்த நாட்டை உருவாக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் ஆசிரியர்கள் செயற்பட்டு செல்லும் திசையை அகலப்படுத்தி மாணவர்களுக்கு விடிவெள்ளியாக உயர்ந்து நிற்கவேண்டும். இதுவே ஆசிரியர் தினத்தின் செய்தியாக அமையட்டும்!

''எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய
நிலனே''
— புறநானூறு

## முஹைதீன் பள்ளிவாசல் திருத்த வேலைக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணம் முஹைதீன் ஜும்மாப் பள்ளிவாசல் திருத்த வேலைகள் இடம் பெறவுள்ளன. இதற்கென வடமாகாண மீள்குடியமர்வு புனரமைப்பு அதிகார சபை இரண்டரை வட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வடகிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் கைவிடப்பட்டும், யுத்த அனர்த்தங்களிலும் இந்தப் பள்ளிவாசல் மிகவும் பாதிப்படைந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறி உள்ள முஸ்லிம்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு மேற்படி பள்ளிவாசல் திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு வழி செய்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு யாழ். முஸ்லிம்கள் நன்றி தெரிவித்துள்ளதாக ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களின் நலன்கள் மற்றும் அவர்களின் பிரச்சினைகளை ஈ.பி.டி.பியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய த.சிவகுமார் (பவான்) மேற்கொண்டு வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 — 10 — 1928



விண்ணில் 29 — 09 — 1998

### திருமதி தர்மநாயகி சிவப்பிரகாசம்

(தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் )

திதி: 06-10-2000 வெள்ளிக்கிழமை

லயன் எயர் விமான அனர்த்தத்தில்
சிக்குண்டு அகால மரணமான
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

சி. அருள்நாதன்,
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(79099)

## 3 லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடப்படும்

### இவ்வருட இறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஒக் 6

யாழ். குடாநாட்டில் இவ்வாண்டு இறுதிக்குள் 3 லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மு. பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எமது செய்தியாளரிடம் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.குடாநாட்டில் இரண்டாயிரம் ஆண்டுக்கான பனை விதை நடுகைக்கு என எமது சபையினால் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடுகை செய்வதற்கான பனை விதைகள் பொது மக்களிடம் இருந்து ஒரு விதை 50 சதம் வீதம் கொள்வனவு செய்யப்படும்.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலத்தில் அழிந்துபோன பனை மரங்களை ஈடு செய்யும் நோக்குடன் மீள் நடுகை திட்டத்தின் கீழ் இந்தப் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன — என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-5)

## மண்டபம் அமைப்பு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் 20 லட்சம் ரூபா செலவில் புதிய அன்னதான மண்டபமும் பொங்கல் மண்டபமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

விரைவில் இவை திறந்து வைக்கப்பட உள்ளன. தொடர்ந்து தர்மகர்த்தா சபையினரால் கலாசார மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. (ஐ152)

## புலிகள் தரப்பில் இருவர் உயிரிழப்பு

'ஓயாத அலைகள் —4, நடவடிக்கையின்போது தமது தரப்பில் மேஜர் தர்மன் (மாணிக்கம் சுஜீவன் – யாழ்ப்பாணம்), மணிமாறன் (மரியநாயகம் மரியடொன்சன் — கிளிநொச்சி) ஆகியோர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்றுக் காலை அறிவித்தனர். (ஐ-8)

## மிலேனியத்தில் மகாஜன

யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில்
இருந்து புலமைப் பரீட்சைக்குத்
தோற்றி மாவட்டத்தில் மூன்றாம்
இடத்தைப் பெற்ற மாணவன்

### பாலசுப்பிரமணியம் நீதுஜன் 180 புள்ளிகள்

மற்றும்

| | | | |
|---|---|---|---|
| S. பிரணவன் | — 171 | G. பாலகாந்தன் | — 153 |
| S. சிவசாம்பவி | — 147 | P. துஷாந்தன் | — 146 |
| K. கிருஷ்ணா | — 146 | G. புவராஜ் | — 145 |
| S. ஜீவனா | — 143 | S. துஜிதா | — 143 |
| N. கிரிஜாந்த | — 140 | T. சயந்தினி | — 138 |
| M. மோகனா | — 136 | V. பத்மாஜினி | — 136 |
| S. லோஜினி | — 135 | G. ஜெகிந்தன் | — 134 |
| K ரதினி | — 134 | | |

ஆகியோரையும் இவர்களுக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாடசாலை அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

மகாஜனச் சமூகம்

யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை

(79095)

## இதய அஞ்சலி

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உப
அலுவலக சித்த மருந்தகத்தில் பணிபுரியும்

Dr. திருமதி கி. அருந்தவராணி (B.S.M.S.)

அவர்களின் பாசமிகு தந்தையார்

### குட்டிப்பிள்ளை சின்னத்துரை

அவர்களின் மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரினது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

B.S.M.S பட்டதாரிகள் சங்கம்,
கைதடி.

(79119)

## உலக ஆசிரியர்தின விழா - 2000
## யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி

எத்தனை தான் இடர்கள் வந்திடினும்
ஏற்றமுடன் தம் பணியை நற்பணியென்று
ஐயந் திரிபறவே ஆக்கமுடன்
ஒரு போதும் மறவாது உழைக்கும்
பேராசான்களுக்கு
ஒண் தமிழால் கூறுகின்றோம் நல் வாழ்த்துக்கள்.

மாணவ, மாணவிகள்,
(79132) கலை வர்த்தகப் பிரிவு - 2000.

## கேதார கௌரி விரத நூல்

சாவகச்சேரி அமிர்தபாஷிஸ அம்பாளின் பெயரால் பூஜையில் வைக்கப்பட்ட கௌரிகாப்பு நூல் தென்மராட்சி மக்கள் விரத இறுதி நாளில் என்னிடம் பெற்றுக் கொள்ளலாம். நட்சத்திரம், பெயர், முகவரி, கடித மூலம் தெரியப்படுத்தவும். விவரம் பின்னர் தனியாக தெரிவிக்கவும்.

"பண்டிதர்"
கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
(பிரதமகுரு வாரியப்பர் சிவன்)

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை. (79118)

## புனரமைக்கப்பட்ட கிணறுகள்
## திறப்பு விழா 06 - 10 - 2000

### விவசாயிகள் சம்மேளனம், சங்கானை மேற்கு-தெற்கு

எமது சம்மேளனத்தின் ஒத்துழைப்புடனும் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் உதவியுடனும் சங்கானை மேற்கு கிராம சேவகர் பிரிவில் 'விளிசுட்டி' வைரவர் ஆலயத்திற்கு அண்மையிலும், நிற்சாமம் விவசாய வீதியில் அமைந்துள்ள இரண்டு கிணறுகள் பொது மக்களின் விவசாய, குடிநீர்ப் பாவனைக்காகப் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு இன்று 06 - 10 - 2000 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு, இந் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இந் நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

| | | |
|---|---|---|
| சு. செல்லத்துரை | சி. கந்தசாமி | வே. சிவலிங்கம் |
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

(79131)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### ஆசிரியர் தினவிழா - 2000
### யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

உலக ஆசிரியர் தினவிழா கொண்டாடும் இன்றைய தினம் எமது யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைச் சீரும் சிறப்புடனும் தமது சேவையை மேன்மேலும் செய்து வாழ வாழ்த்துகிறார்கள்.

அத்துடன் எமது பாடசாலையில் உடற்கல்விப் போட்டி, தமிழ்த்தின விழா, ஆங்கிலதின விழா, பண்ணிசைப்போட்டி என்பவற்றில் கோட்ட, வலய, மாகாணப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசில்களைப் பெற உதவிய ஆசிரியர்களையும், ஓய்வு பெற்றும் எமது பாடசாலையின் வளர்ச்சியிலும் நலனிலும் அக்கறை கொண்டு உதவி புரிகின்ற முன்னாள் அதிபர், ஆசிரியர்களையும் நலத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்.
பா. அ. ச, ப. மா, ந. வி.
(79134)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக் கழகத்தில்
06 - 10 - 2000 அன்று B.Sc. பட்டம்பெறும்
எமது நிறுவன A/L கணித ஆசிரியர்
**திரு. செந்தில்ராஜ்**
அவர்களையும்
கலைமாணிப்பட்டம் பெறும்
A/L கலைப்பிரிவு அளவையியல் ஆசிரியர்
**திரு. தர்மதேவா**
அவர்களையும்
Diploma பட்டம் பெறும் எமது தாவரவியல்
**ஆசான் திரு. S. குணசீலன்**
அவர்களையும் உளமார வாழ்த்துகிறோம்.

நிர்வாகி, மாணவர்கள், சக ஆசிரியர்கள்,
பங்றோயல்ஸ் சயன்ஸ் அக்கடமி,
நெல்லியடி. (79139)

## நவராத்திரி நிகழ்வுகள்

அளவெட்டி வடக்கு அ. மி. த. க பாடசாலையில் நாளை சனிக்கிழமை விஜய தசமி அன்று நவராத்திரி விழாவும், ஏடு தொடக்கல் வைபவமும் நடைபெற உள்ளன. (ஐ)

★ ★ ★

நெடுந்தீவு, ஒக். 6
வேலணைப் பிரதேச செயலர் பணிமனையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் எஸ். இரத்தினம் தலைமையில் வாணிவிழா நடைபெறவுள்ளது.
(க-111)

★ ★ ★

நெடுந்தீவு, ஒக். 6
நெடுந்திவு மகாவித்தியாலய இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நாளை சனிக்கிழமை விஜயதசமி விழா கொண்டாடப்படும்.
(க-111)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 6
நவாலி அருள்மிகு ஸ்ரீ அந்திரான் முருகமூர்த்தி திருக்கோயிலில் நவராத்திரி பூசை, வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

அங்கு ஆலயப் பிரதமகுரு சோ. கௌரீஸ்வரக்குருக்கள் தலைமையில் தினமும் விசேட அபிஷேகமும், பூசைகளும், நவராத்திரி கொலு பூசையும் இடம்பெற்று வருகின்றன
(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 6
சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் தினமும் மாலை 6 மணிக்கு நவராத்திரி பூசை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

ஆலய மண்டபத்தில் நடைபெறும் கொலு பூசையை அடுத்து சமயச் சொற்பொழிவுகளும், கலைநிகழ்ச்சிகளும் தினசரி இடம்பெற்று வருகின்றன.
(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 6
தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம சுவாமி செ.மோகனதாஸ் தலைமையில் நவராத்திரி பூசை, ஆராதனை, கொலு பூசை வழிபாடுகள் மாலை 5. 30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.
(ஐ-30)

## ஸ்ரான்லியில்
### (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)
### எழுத்தறிவித்த - கல்வி எழில்மிகு
## அதிபர் ஆசிரியத் தெய்வங்களே!
## வாழி! வாழி!

வித்தைகள் கற்றுத் தந்தவரை — கல்வி
விடியலுக்காக உழைத்தவரை
எத்தனை இடர்கள் சூழ்ந்தாலும்
எப்படி நாங்கள் மறந்திடுவோம்!
புத்தம் புதிய வாழ்வுக்காய்
பொழுதுகள் முழுதும் உழைத்தவரை
நித்தம் நினைந்து கொள்வோமே — கல்வி
நேர்த்திகள் நிறைத்து வாழ்த்தி மகிழ்வோமே!

மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தி.
யாழ்ப்பாணம்
(சி/13227)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயம் சுன்னாகம்.

5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

| | | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 1) | ச. தனுஷன் | 170 | 35 |
| 2) | சு. பிரசன்னா | 158 | 136 |
| 3) | சி. சாயிராஜ் | 154 | 200 |
| 4) | ஸ்ரீ. றுசானி | 140 | 618 |
| 5) | ந. கீர்த்தனா | 137 | 724 |
| 6) | இ. பிரதீபன் | 137 | 724 |

இடம்பெயர்ந்து இங்கு கல்வி கற்கும் மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 7) | ந. பார்த்தீபன் | 153 |
| 8) | அ. கிஜிதன் | 150 |
| 9) | சு. செந்தூரன் | 150 |

ஆகியோரையும் பாராட்டுவதுடன்
இவர்களுக்குக் கல்வி போதித்த ஆசிரியை
**திருமதி வாசுகி சச்சிதானந்தம்**

அவர்களையும் இவர்களுக்கு உறுதுணையாக இருந்து உதவிய அதிபர், உப அதிபர் மற்றும் ஏனைய ஆசிரியர்கள், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் மனமார வாழ்த்துவதுடன் மயிலணி சைவ மகாவித்தியாலய புகழ் ஓங்க உழைத்திடுவோம் என இந்நன்னாளில் உறுதி செய்வோமாக!

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயம்,
சுன்னாகம்.
(79130)

## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
## கேள்வி அறிவித்தல் - 2000

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 20 — 10 — 2000 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே பி. ப. 2-00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, "தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 20 - 10 - 2000 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப்பணம் |
|---|---|---|
| புதிய பிரதேச செயலகம், கோப்பாய்க்கு உள்வீதி அமைத்தல் | 150. 00 | 500. 00 |

மேற்குறிப்பிட்ட வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 19 — 10 — 2000 ஆம் திகதி பி. ப. 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. குணசிங்கம்,
ஜே. பீ. யு. எம்
தவிசாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை
நீர்வேலி.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
03 - 10 - 2000
(சி-13214)

## வாழ்த்துகின்றோம்

### யா/உடுவில் அ.மி.த.க. பாடசாலை, சுன்னாகம்

இவ்வாண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் சித்தியடைந்தமைக்கு கல்வி கற்பித்த பாடசாலை ஆசிரியர்களையும் விசேட வகுப்புகள் நடத்திய ஆசிரியர்களையும் வழிநடத்திய அதிபர் அவர்களையும் ஆசிரியர் தினத்தில் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

சித்தியடைந்த மாணவர்கள்;

1. சி. டிமல்சன் 2. வ. கவிதாலயன்
3. ம. ரூபிணி 4. ந. லகதீப்
5. கு. கோபிதரன்

திரு. க. சிவஸ்கந்தராசா
திருமதி ப. மகாலிங்கம்
திரு. ம. குழந்தைவடிவேல்
திரு. ச. வரதராயன்
திரு. பி. ரவிசீலன்

(சி/13233)



## வாழ்த்துகின்றோம்

யாழ் பல்கலைக்கழகத்தில்
இன்று (6-10-2000) வெள்ளிக்கிழமை
இலக்கிய கலாநிதிப் பட்டம் பெறும்
பேராசிரியர்
**சுவாமிநாதன் சுசீந்திரராஜா**
அவர்களை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகம்
98/99 கல்வியாண்டு
(7914c) மொழியியற்றுறை மாணவர்கள்.



## அன்னை திரேசா சபையினரின் பொன் விழா

### (1950 - 2000)

உலகின் 120 நாடுகளில் அன்புப் பணி புரியும் அன்னை திரேசா சபையினரின் பொன் விழாக் கொண்டாட்டம் நாளை (7-10-2000) சனிக்கிழமை நடைபெறுகிறது.

யாழ். மறைமாவட்டத்திலும் பணிபுரியும்
அன்னை திரேசா சபையினரின் பணி சிறக்கவும்
50 ஆண்டுகள் நிறைவை நினைவு கூரவும்
08-10-2000 ஞாயிறு மாலை 4.15 மணிக்கு
**புனித மரியன்னை பேராலயத்தில்**
நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குருக்கள், கன்னியர், பொது நிலையினர் தயவு செய்து இந்தத் திருப்பலியில் கலந்து கொள்ளவும்.

அருள்திரு. ஜே. பி. ஈ. செல்வராஜா
(சி/13245) யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை
பெருமைக்குரிய வல்வை மைந்தர்களின்
வரிசையில்......



செல்வன்
**புஸ்பராசா சிவரூபன்**

20 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் **முதலாம் இடத்தைப் பெற்ற (182 புள்ளி)** மாணவனையும் அவரை வழி நடத்திய அதிபரையும் வகுப்பு ஆசிரியரையும் மற்றும் பாடசாலையின் ஆசிரிய குழாமினரையும் உளமார வாழ்த்துகின்றோம்.

'சிவரெத்தினம் வெதுப்பகம்',
உரிமையாளர் குடும்பமும்,
அதன் ஊழியர்களும்.
வல்வெட்டித்துறை. (79153)


# பட்டமளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 19 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இன்று பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறுகின்றது.

மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளஇந்தப் பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 840 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

முதலாவது அமர்வு காலை 9.30மணிக்கும் இரண்டாவது அமர்வு முற்பகல் 11.30 மணிக்கும் மூன்றாவதுஅமர்வு பிற்பகல் 2. 30 மணிக்கும் ஆரம்பமாகும்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறவுள்ளோரின் எண்ணிக்கை வருமாறு:.

★ கலாநிதி — 4 பேர்
★ முதுமெய்யியல்மாணி — 8 பேர்
★ முது விஞ்ஞானமாணி — ஒருவர்
★ கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா—35 பேர்.
★ கலைமாணி—167 பேர்
★ தொழில் நிர்வாகமாணி —37 பேர்.
★ வர்த்தகமாணி — 76 பேர்.
★ நுண்கலைமாணி (பரத நாட்டியம்) 9 பேர்.
★ நுண்கலைமாணி(வாய்ப்பாட்டு—வயலின்—வீணை)— 7 பேர்.
★ மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி—87 பேர்.
★ மருத்துவ விஞ்ஞான மாணி—ஒருவர்.
★ விஞ்ஞானமாணி(1997) — 96 பேர்.
★ விஞ்ஞானமாணி(1998) — 96 பேர்.
★ விவசாய விஞ்ஞான மாணி—10 பேர்.
★ சித்தமருத்துவ சத்திர சிகிச்சைமாணி—7 பேர்.
★ நாட்டியக் கலைமணி (பரதநாட்டியம்)—23 பேர்.
★ இசைக்கலைமணி (கர் நாடகஇசை— வாய்ப்பாட்டு) —20 பேர்.
★ இசைக்கலைமணி (கர் நாடகஇசை — வயலின்) — 5 பேர்.
★ இசைக்கலைமணி (கர் நாடகஇசை — வீணை) — 2 பேர்.
★ மீன்பிடியியல் டிப்ளோமா— 43 பேர்.
★ கலைமாணி(வெளிவாரி) —69 பேர்.
★ வர்த்தகமாணி (வெளிவாரி— 34 பேர்.

[ஐ10]

## லங்கா சிமெந்து சம்பளம்

யாழ்ப்பாணம், ஒக. 6
லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர்களின் ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவு இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை யாழ். வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படவிருக்கின்றது. -3)

## ஈ. பி. டி. பி.

(4 ஆம் பக்கத் தொடர்)
எமது மக்களுக்கு திறம்படச் சேவையாற்றியுள்ளோம்.

யுத்தம் தொடர்கின்றது எனக்கூறி அரசு யாழ். மண்ணில் அபிவிருத்திகளையும் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு வேலைத் திட்டங்களையும் புறக்கணித்திருந்த போது, நாம் கொடுத்த அழுத்தத்தினால் அரசு பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முன் வந்தது.

இந்த வகையில் எமது பிரதேசத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு ஆகிய விடயங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தது. இதுஎமது மக்களுக்குப் புரிந்த தேசத்துரோகமா? கடந்த 3 ஆண்டுகால செயற்பாட்டில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இளம் சமூகத்தினருக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்ததும் —

ஆயிரம் ஆயிரம் அரச ஊழியர்களின் பிரச்சினைகளையும் அரசுக்கும் ஊழியர்களுக்கும் இடையே பாலமாக அமைந்து எமது அரசியற் பலத்தின் மூலம் தீர்வு கண்டதும்—தேசத்துரோகமா?

திரைமறைவில் இருந்து அரசிடம் உதவிகளை, சலுகைகளைப் பெற்றுக்கொள்வதும் புலிகள் பற்றி தகவல்களை கொடுக்கின்றதுமான மூடுமந்திர அரசியல் சூதாட்டங்கள் ஈ.பி.டி.பி.யின் வரலாற்றில் இல்லை. எமது மக்களுடைய பிரச்சினைகளை உண்மையாகவே முன்னெடுத்துச் செல்கின்ற ஒரே ஒரு கட்சியாக ஈ. பி. டி. பி மிளிர்வதை எம் மக்கள் அறிவார்கள்.

ஈ.பி.டி.பி யின் செயற்பாடுகள் என்றுமே ஜனநாயக வழியிலானவை. இதற்காக யுத்த வெறி மூர்க்கம் கொண்டு ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கி ஈ.பி.டி.பியை மட்டும் அழித்து விடலாம் என எண்ணிச் செயற்படுவோர், தமிழ் பேசும் மக்களை மரணப் படுகுழிக்குள் தள்ளிவிட்டு, தமிழ் இனத்தை அழித்துவிட முனைபவர்களே என்பதை விரைவில் வரலாறு பாடம் புகட்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)


## மகிழ்கிறாள் காரை இந்துத் தாய் மணிவிழா நாயகனால்

23 – 07 – 2000 அன்று மணிவிழாக் கண்ட
**யா/ கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலய**
முன்னாள் விஞ்ஞான விளையாட்டுத்துறை ஆசிரியர்



**திரு. அ. சோமாஸ்கந்தன்**

கால் நூற்றாண்டை நோக்கி ஆற்றிய அளப்பரிய சேவை பெற்றதால்
காரை இந்துத் தாயவள் காலம் முழுவதும் மகிழ்கிறாள்!
நாள் முழுதும் பயிற்றிய விஞ்ஞான, விளையாட்டுக் கல்வி பெற்றே
நாடளாவிய ரீதியில் சேர்ந்த வெற்றியால் நம் இந்து மகிழ்கிறாள்!
ஆல் போல் தழைத்து நிழல் தந்த வித்தையின் விருட்சமானீர்கள்!
அதிபர் ஆ. தியாகராசா காலத்தில் ஆசானாய் விளங்கினீர்கள்!
'வாழ்கபல்லாயிரம்ஆண்டுகள்வளமுடன்' என வாழ்த்துகிறாள்காரைமாதா!
வடமராட்சி வியாபாரி மூலை தந்த வித்தகனே!
சோமாஸ்கந்தனே வாழி! வாழி!

ஆசிரியரின் சேவைக்குரிய
காரை இந்துவின் மைந்தர்கள்.
(பழைய மாணவர்)

கவிதையாக்கம்:-
மதுரகவி காரை எம். பி. அருளானந்தன் (சி/13230)


# தமிழ் மக்களுக்கு எமது வேண்டுகோள்!

* வடக்குக் கிழக்கை இணைத்து திருகோணமலையைத் தலைநகராமாக்கி ஒரு அரசாங்கத்தை நடத்தியவர்கள் நாங்கள்.
* எமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் நட்பு என்றென்றும் பேணப்படுவது முக்கியமானது எனக் கருதுபவர்கள் நாங்கள்.
* தமிழ் மக்களின் பிரச்சினைகளின் பரிமாணங்களை, ஆழ அகலங்களை அறிந்தவர்கள். அர்ப்பண உணர்வுடன் செயற்படக் கூடியவர்கள் நாங்கள்.

பேரினவாதப் படுகொலைகளையும் ஜனநாயக மறுப்புப் படுகொலைகளையும் முடிவுக்குக் கொண்டு வரவும் அழிவே வாழ்க்கையாகிவிட்ட எமது மண்ணில் சமாதானச் சுடரொளியை ஏற்றிடவும் தமிழ் மக்களின் சுயமரியாதை, கௌரவத்தை உறுதிப்படுத்தும் தீர்வொன்றை எட்டுவதற்கும் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் போக்குவரத்து, சோதனைச் சாவடிப் பிரச்சினையிலிருந்து வேலைவாய்ப்புப் பிரச்சினைவரை அனைத்திற்கும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைத் துரிதமாகக் காண்பதற்கும் அறிவும் ஆற்றலும் நிறைந்த ஒரு தலைமைக்கு வாக்களியுங்கள்.

குறிப்பு:-

**வானம்பாடி ஒலிபரப்புச் சேவையில் இரவு 8.00 மணிக்கு வரதராஜப்பெருமாள் அவர்களின் உரையை நீங்கள் கேட்கலாம்.**



த. சுபத்திரன் (றொபேட்)

இல. 3

| சுயேச்சைக் குழு - 2 | (மீன்) | X |
|---|---|---|

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்)

**இன்று இரவு 8 மணிக்கு வானம்பாடி சேவையில் பேட்டி ஒலிபரப்பாகும்.**



அ. வரதராஜப்பெருமாள்

இல. 1

(78943)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000





பேரன்புமிக்க தென்மராட்சி வாக்காளப் பெருமக்களே!

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தென்மராட்சி நகரின் இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஒரு வேட்பாளராக உங்கள் முன் நிற்கின்றேன்.

தென்மராட்சி மண் பல பெருமைகளைக் கொண்டது. சாதனையாளர்கள், கல்விமான்கள், தலைவர்கள், பொறியியலாளர்கள், சட்ட வல்லுநர்கள், மருத்துவர்கள், நிர்வாக செயலாளர்கள், விவசாய மன்னர்கள், கூட்டுறவாளர்கள், தொழிலதிபர்கள், ஏற்றமிகு வர்த்தகர்கள் போன்றவர்களை உலகுக்கு வழங்கிய பிரதேசம் என்பதை யாவரும் அறிவார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர்களுள் ஒருவராக இருந்தவரும் தொடர்ச்சியாக 25 வருடம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் வகித்தவருமாகிய அமரத்துவம் எய்திவிட்ட அமரர் அண்ணன் வீ.என்.நவரத்தினத்தின் அரசியல் வாழ்வுக்கு உரமூட்டி வளர்த்தவர்கள் தென்மராட்சி பெருமக்கள்தான்.

அந்த வகையில் இன்றைய நெருக்கடி மிக்க அரசியல் சூழ்நிலையில் நான் எனது மண்ணிற்கு அரசியல் ரீதியான பங்களிப்பை வழங்குவதில் மிக்க அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ளேன். நான் கடந்த 14 வருடங்களாகக் கொழும்பில் சட்டத்தரணியாக தொழில்பார்த்து வந்துள்ள போதிலும்கூட, தமிழ் மக்களின் சமூகப் பொருளாதாரம், கல்வி, மனித உரிமை மேம்பாட்டுச் சேவைத் திட்டங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்களாகிய லயன்ஸ் கழகம், அறவழிப் போராட்டக் குழு, வை.எம்.சீ.ஏ. மற்றும் இந்து இளைஞர் மன்றங்கள் மூலம் என்னால் ஆன சேவைகளை கடந்த காலங்களில் ஆற்றி வந்துள்ளேன்.

இவ்வருடம் மே மாதம் தென்மராட்சியில் இடம்பெற்ற இடம்பெயர்வின்போது தென்மராட்சி மக்கள் அனுபவித்த துன்பங்கள் துயரங்களையும் பொருள், உடைமைகள் மற்றும் உயிர் இழப்புக்கள் பற்றியும் நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன்.

உங்கள் துன்பங்களிலும், கஷ்டங்களிலும் நான் நேரடியாகப் பங்கு கொள்வதற்கு காலம், நேரம், இடம் அனுமதிக்காத போதிலும் கூட என் இதயம் தங்களுடனேயே இருந்துள்ளது என்பதை இதயபூர்வமாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களை அப்பொறியில் இருந்து மீட்டெடுத்து சுதந்திரக் காற்றினை சுவாசிக்கச் செய்யும் தொடர்ச்சியான முயற்சிகளில் எமது கட்சி அர்ப்பணிப்புடன் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தென்மராட்சி வாசியான எனக்கு உங்களது பலம் மிக்க வாக்குகளை அளித்து நாடாளுமன்றம் செல்கின்ற வாய்ப்பினை வழங்கும்படி மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் தங்கள் ஒவ்வொருவரையும் தங்களின் தற்போதைய வாழ்விடங்களில் நேரில் வந்து சந்திக்கின்ற வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருப்பது குறித்து வருந்துகிறேன்.

உங்களில் ஒருவனாகிய என்னை ஆதரித்து தேர்தல் அன்று வாக்குச் சீட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதயசூரியனுக்கு எதிரே புள்ளடியிட்டு விருப்பு வாக்குகளில் ஒன்றை எனது இலக்கமாகிய ஆறுக்கு மேலே இட்டு ஏனைய இரு விருப்பு வாக்கில் உங்களுக்கு விரும்பிய இருவருக்கும் அளிக்கும்படி தாழ்மையுடன் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் முன்னுரிமை வழங்கி, யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த, மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ, நிரந்தரமான அரசியல் தீர்வை ஏற்படுத்த என்னால் ஆன முயற்சிகளை மேற்கொள்வேன்.

உண்மை, அன்பு, நேர்மை வழியில் கட்சியின் இலட்சியப் பயணத்தை தொடர என்னை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றுவேன்.

உங்களின் பெருமை மிக்க வாக்குகளை அளித்து என்னை வெற்றியடையச் செய்வீர்கள் என இதய பூர்வமாக நம்புகின்றேன்.

| தமிழர் விடுதலைக் கூட்டணி | (உதயசூரியன்) | X |
|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | X | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

நடராஜா இரவிராஜ்

(78935)

## யா/ கொழும்புத்துறை இந்து ம. வி.
### 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2000
## வாழ்த்துகின்றோம்

சி. துவாரகன்
லோ. கஜமுகன்
கோ. ஜெயந்தன்

இந்த மாணவர்கள் இடம்பெயர்ந்து, அசாதாரண சூழ்நிலையிலும் தங்கள் திறமையைக் காட்டி சித்தி அடைந்தமைக்காக வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.

(79157)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினமாகிய இன்று தெல்லிப் பழைக் கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின் றோம்.

உதவிக்கல்விப் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
தெல்லிப்பழை.

(79136)

# மரண அறிவித்தல்கள்

## சுவாமிநாதன் ஆச்சாரி குருநாதன்

52/5, நாவலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட மு. சுவாமிநாதன் ஆச்சாரியின் மகன் குருநாதன் 5- 10- 2000 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் சுவாமிநாதன் ஆச்சாரி அமுத வல்லியின் மூத்த மகனும், தங்கராணியின் அன்புக் கணவரும், காயத்திரி, கண்ணன் ஆகியோரின் அன் புத் தந்தையும், யோகநாதன் (பிரான்ஸ்), யோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாவதி, பரராசசிங்கம், தணிகாசலம், ஞானேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணி அளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. சுவாமிநாதன்
(தகப்பன்)

52/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(79129)

## தம்பையா சொர்ணலிங்கம்
(இணுவில்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இணுவில் கிழக்கில் வசித்தவருமான தம்பையா சொர்ணலிங்கம் நேற்றுக் காலை (5 – 10 – 2000) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா— சின்னப் பிள்ளையின் அன்பு மகனும் சிவநேசத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், செல்ல முத்து, கனகம்மா ஆகியோரின் சகோதரரும், சிவ சொர்ணகௌரி (ஆசிரியை, வவுனியா மகாவித்தி யாலயம்), பாஸ்கரமூர்த்தி (சுவிஸ்), வசந்தமாலா, பிரபாகரன் (பிரான்ஸ்), பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர் கள்.

தகவல்:—
சொ. சிவநேசம்
(மனைவி)

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(79160)

## திருமதி தர்மகுலசிங்கம் விக்கினேஸ்வரி

எழுதுமட்டுவாழ் முகமாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தர்மகுலசிங்கம் விக்கினேஸ்வரி 2-10-2000 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தர்மகுலசிங்கத்தின் (கதிரமலை-நாகர் கோவில்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிதம் பரப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், குருபரன் (கிளி/பளை மத்திய கல்லூரி), குணதீபன் (யாழ். எழுதுமட்டுவாழ் கணேச வித்தி யாலயம்), காலஞ்சென்ற வேணியா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (3-10-2000) செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ. வேதாரணியம்
(முன்னாள் தபாலதிபர்)
கோ. வீரகத்திப்பிள்ளை (C.T.B)

தற்காலிக முகவரி:
பண்டாரி அம்மன் கோவலடி,
தம்பசிட்டி, பருத்தித்துறை.

(78947)

## நவராத்திரி நிகழ்ச்சிகள்

கொழும்புத்துறை, ஒக். 6

அராலி மேற்கு வட்டிய வத்தை அருள்மிகு ஸ்ரீ ஹரி ஹரபுத்திர ஐயனார் தேவஸ் தானத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தேவஸ்தான குரு ச. மு. பிரபாகரசர்மா தலைமை யில் மாலை 4.30 மணி தொடக்கம் விசேட பூசை, ஆராதனை, வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

விஜயதசமிதினமான நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுவாமி வீதி வலம் வந்து மானம்பூத் திருவிழா நடைபெறும்.

(ஐ-30-17)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம் பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் தேவஸ்தானத் தில் நவராத்திரி நிறைவு விழா இன்று நடைபெறுகிறது.

நாட்டில் மிக விரைவில் அமைதி, சமாதானம், ஒற் றுமை, சுபிட்சம் நிலவ இறை ஆசி வேண்டி மாலை 5.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை மாணவர்களின் பஜனை- கூட்டுப் பிரார்த் தனைகள் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை மாலை மானம்பூத் திருவிழா இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத் தில் தினமும் பிற்பகல் 3.30 மணிமுதல் 5 மணிவரை நவ ராத்திரி விசேட வழிபாடும், பஜனைகளும் இடம்பெற்று வருகின்றன.

இறுதிநாளான விஜயதசமி அன்று வித்தியாரம்பம் இடம் பெறும். (க-17)

★ ★ ★

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை யின் வாணிவிழா நாளை சனிக்கிழமை காலை பாட சாலை அதிபர் அ. சபாநாய கம் தலைமையில் நடை பெறும்.

விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற வுள்ளன. (சு-17)

★ ★ ★

யாழ்ப்பாணம் தேசிய கல்வி யியல் கல்லூரியின் முதலா வது நவராத்திரி விழா நிகழ் வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சரஸ்வதி பூசை நாளன்று விசேட பூசைகள், வழிபாடு கள் நடைபெறுவதோடு கல் லூரி பயிற்சி மாணவர்களால் நடன நிகழ்வுகள், பாட்டுக் கச்சேரி, கலை நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.

(க-152)

★ ★ ★

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணிவிழா வும், வித்தியாரம்பமும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

முற்பகல் 10 மணிக்கு வித்தி யாரம்பமும் பிற்பகல் 3 மணிக்கு வாணிவிழாவும் கலா மண்டபத்தில் இடம்பெறும்.

(சு-17)

★ ★ ★

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் நாளை சனிக்கிழமை நவ ராத்திரி விழா வித்தியாலய அதிபர் சு. நடராசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

(க-111)

★ ★ ★

வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகாதேவி சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி ஆல யத்தில் நவராத்திரி பூசையை முன்னிட்டு தினமும் முற்பகல் 9 மணிக்கு அம்பாளுக்கு அபி டேக ஆராதனைகளும் பிற் பகல் 6 மணிக்கு கொலுப் பூசையும் இடம்பெற்றுவரு கின்றன.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நெடியகாடு சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் மானம்பூ உற்சவம் நடை பெறும். (க)

## அறிவித்தல்

பட்டமளிப்பு விழாவன்று வெளிப்புறப் படப்பிடிப் பில் ஈடுபடும் தனிப்பட்டவர்கள் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தில் அனுமதியை காலை 7-00 — 9-00 வரை பெற்று மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின் றனர்.

பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்

(79151)

## பட்டமளிப்பு விழா நாயகர்களுக்கான வெளிக்கள படப்பிடிப்பு

யாழ். பல்கலைக்கழக 19 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற பட்டதாரிகளின் நலன் கருதி, கலைப்பீட மாணவர் ஒன்றியம் எமது பொது அறையில் வெளிக்கள படப்பிடிப்பு நிலையத்தினை (ஸ்ரூடியோ) ஒழுங்கு செய்துள்ளது என்பதனை சகல பட்டதாரி மாணவர்களுக்கும் அன்புடன் அறியத் தரு கின்றோம்.

பட்டம் பெறும் பட்டதாரிகள் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துகள்!

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(79152)

### யா / ஆனைக்கோட்டை
### அ. மி. த. க. பாடசாலையைச்
சேர்ந்த
### 5 ஆம் ஆண்டு
### புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி எய்திய பின்வரும் மாணவர்களை
## வாழ்த்துகின்றோம்

சிவகுமார் ரஜீபன் — 155
சிவபாதம் விக்னேஸ்வரன் — 154

அதிபர், ஆசிரியர்கள்,
(79147) பெற்றோர், பழைய மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்

2000 ஆம் ஆண்டில் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்:

1. பே. குகநாத் — 154
2. த. சாருபன் — 145
3. பா. பிருந்தா — 140
4. சி. தவநீஸ் — 139
5. ப. சௌமியா — 136

மேற்படி மாணவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

(79148) — பழைய மாணவர் சங்கம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, கொக்குவில்.

2000 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றிய மாணவர்களில் 177 புள்ளி களைப் பெற்று 34 ஆவது இடத்தையும் யாழ். மாவட் டத்தில் 8 ஆவது இடத்தையும் உடுவில் கோட்டத்தில் முதல் மாணவியுமான

லோ. தக்ஷாயினி அவர்களையும்
ஏனைய மாணவர்களான

| | |
|---|---|
| இ. ஜனனி | 145 |
| சோ. அனுஷ்குமார் | 144 |
| ஸ்ரீ. வினோஜ் | 135 |
| சி. சிவரஞ்சினி | 134 |

120 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களான

| | |
|---|---|
| தி. கௌரீசன் | 131 |
| ப. பவித்தா | 131 |
| நா. குகானந்தன் | 130 |
| நே. சயிலா | 126 |
| இ. ஆரண்யா | 125 |
| சி. ஸ்ரீநாத் | 125 |
| இ. அனுஜா | 123 |
| பா. விசாகன் | 120 |

ஆகிய மாணவர்களையும் உளமாரப் பாராட்டுவது டன் இவர்களை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களை யும் வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(சி/13238) பழைய மாணவர்கள்.

## துயர் பகிர்கின்றோம்

யாழ். மத்திய கல்லூரி ஆய்வுகூட முன்னாள் உதவியாளரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய

**தம்பாப்பிள்ளை பூபாலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

கல்விசாரா ஊழியர்கள்,
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

[சி/13235]

## வாழ்த்துகின்றோம்

யா/ சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை, நிற்சாமம்,

2000 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

செல்வன் நா. கபிலன் - 156 புள்ளி
செல்வி தி. தயானிகா - 145 புள்ளி

இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் இவர்களுக்குக் கல்வி ஊட்டிய அதிபர், ஆசிரியர்களையும் ஊக்கமளித்த பெற்றோர்களையும் வாழ்த்துகின்றோம்.

— **பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

(79150)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 19 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் அனைத்து பட்டதாரிகளுக்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**பல்கலைகழக மாணவர் ஒன்றியம்,**
யாழ். பல்கலைக்கழகம்.

(79149)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

19 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி:
அரசடிச் சந்தி, நவாலி.
T. P. 070-212761 [79169]

## யா | கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

**பழைய மாணவர் சங்கம்**

**இன்றைய ஆசிரியர் தினத்தில் எமது அதிபர், ஆசிரியர்களை**

## வாழ்த்துகின்றோம்

இருண்ட மனதில் விளக்கேற்றி நித்தம்
ஈனத்தனத்தை யெல்லாம் மாற்றி
மடமைக்குணம் அழிக்கும் ஆசான்
அவன் மாண்பினை வாழ்த்திடுவோம் வாழி!

G. T. ஞானசேகரவேல்
செயலாளர்.

(79156)

## வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தின்
**19ஆவது பட்டமளிப்பு விழாவில்**
பட்டம் பெறும்
எமது நிறுவன விரிவுரையாளர்கள்

1. திரு. T. அரவிந்தன்
2. திரு. A. உதயகுமார்
3. திரு. S. சிறீசேதுபரன்
4. திரு. T. யூறிசன்
5. திரு. A. டெனி
6. செல்வி L. நாகேஸ்வரன்

ஆகியோருக்கு IIS சமூகத்தினர் தமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றனர்.

**இயக்குநர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்.**

IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/13242)

## போஷாக்குக் கருத்தரங்கு

சண்டிலிப்பாய், ஒக். 6

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் நடத்திவரும் வளர்ந்தோருக்கான போஷாக்குக் கருத்தரங்கு திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு தையல் பயிற்சி நிலையத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர். சி. எஸ். நச்சினார்க்கினியன் 'நோயாளர்களுக்கான போஷாக்குணவு' என்னும் விடயம் பற்றி உரையாற்றுவார்.

(ஜ-135)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஒக். 6

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியரான பொ. அமிர்தலிங்கம் எழுதிய 'பூகோள சுற்றாடல் 'பிரச்சினைகள்' என்னும் நூலின் அறிமுக விழா கல்லூரி அதிபர் கி. மகேந்திரன் தலைமையில் ஆசிரியர் தினமான இன்று காலை 10.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

(இ-3)

## சங்கானையில் கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

சங்கானை மேற்கு கிராம சேவகர் பிரிவில் விளிசிட்டி, நிற்சாமம் ஆகிய பகுதிகளில் விவசாய, குடிதண்ணீர்ப் பாவனைக்காக புனரமைக்கப்பட்ட இரண்டு கிணறுகள் பாவனைக்குத் திறந்து வைக்கும் வைபவம் இன்று இடம்பெறவுள்ளது.

பட்டினிக்கெதிரான நிறுவனம் இந்தக் கிணறுகளைப் புனரமைத்துள்ளது-

(-3)

## தும்பளையில் ஆசிரியர் தின விழா

பருத்தித்துறை, ஒக். 6

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அதிகாரி சி. புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி கல்விக் கோட்டங்கள் இணைந்து நடத்தும் இந்த விழாவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வைபவமும் நடைபெறவுள்ளதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

[ஜ-10-118]

## புலமைப்பரிசில் - 2001

8 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

1. கு. லஜிந்தன் (இந்து ஆர. பாட.)
2. கு. பௌசனா (கண்டுக்குளி ம.க.)
3. த. தர்ஷிகன் (கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வி.)
4. ஆ. ஜதிகானந்
5. ந. திருத்தணிகன் (இந்து ஆர. பாட.)

அடுத்த பரீட்சை ஞாயிறு.

**Bond** யாழ். நகர்
(79155)

# மரண அறிவித்தல்கள்

## இராசர் பேரின்பநாயகம்

வயாவிளான் உத்திரியமாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது மாதகல் அந்தோனியார் கோயிலுக்கு அருகில் வசித்தவருமாகிய இராசர் பேரின்பநாயகம் (பிரபல வைத்தியர்) நேற்று [5—10—2000] காலமானார்.

அன்னார் சொர்ணநாயகியின் அன்புக் கணவரும் திருமதி சிவரத்தினம் கிறிஸ்தோபர், திருமதி செபரட்ணம் செல்வநாயகம், செல்வி லில்லிரட்ணம், காலஞ்சென்ற இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை [7—10—2000] சனிக்கிழமை முற்பகல் 9மணியளவில் புனித அந்தோனியார் கோயில் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எஸ். யோசேப்

பிரதான வீதி,
மாதகல். [79145]

## வைத்திலிங்கம் கிருஸ்ணசாமி

(ஓட்டுமடம்)

8/2, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கிருஸ்ணசாமி அவர்கள் நேற்று (05 - 10 - 2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரி (பாக்கியம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திலகநாதன், சகுந்தலாதேவி, சற்குணராணி, சற்குணேஸ்வரி (இங்கிலாந்து), சண்முகநாதன் (ரவி — கனடா), ஆகியோரின் அன்புமிகு தகப்பனாரும், நாகேஸ்வரி (கொக்குவில்), சிதம்பரப்பிள்ளை (ஓட்டுமடம்). குணசேகரம் (கெருடாவில்), சிவகுமார் (U K), ஸ்ரீதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(06-10-2000) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

8/2, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை.
(79158)

## அந்தோனிப்பிள்ளை றோசம்மா

(றோஸ்மணி)

அந்தோனிப்பிள்ளை றோசம்மா (றோஸ்மணி) நேற்று (05-10-2000) காலமாகிவிட்டார்.

இவர் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பாவிலு சுவக்கீன் பிள்ளை- புஷ்பம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சவிரியான் - சவிரியம்மா ஆகியோரின் மருமகளும், யூலின்றொசான் (லண்டன்), றிச்சேட், றொசாணி, கஜனி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பூமணி, இராய்க்கினி, வசந்தன் (இத்தாலி), ஜெறோம் (லண்டன்), பாலதாஸ், வவா, ஸ்ரீபன் இரவிச்சந்திரன், பாஸ்கரன் (இத்தாலி), ஜீவா, (அமெரிக்கா), வதனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோசே, யேசுதாசன் (லண்டன்), றீற்றம்மா, யோண்மேரிவிஜயன், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ஞானம், இராணி, இன்பராணி, பிரான்சிஸ்குமார் (இத்தாலி), றெலின்ரா (இத்தாலி). ஜெனிற்றா (அமெரிக்கா), தேவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை (07-10-2000) காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து (4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை) புனிதயாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியுடன் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள்.

ஆனைக்கோட்டை. (79144)

## குமாரவேலு விஸ்வலிங்கம்

மட்டுவில் தெற்கு, வாகையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட குமாரவேலு விஸ்வலிங்கம் அவர்கள் நேற்று (05-10-2000) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சுமித்திரா, நிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜலக்ஷ்மி, காலஞ்சென்ற லோகராஜா மற்றும் மகேஸ்வரி (இந்தியா), பொன்னம்பலம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(6-10-2000) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் பிற்பகல் 1-00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. நிஷாந்தன்
(மகன்)

61/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (79170)

# உலக ஆசிரியர் தினம் - 2000

பெரு மதிப்பிற்குரிய ஆசிரியர்களே!

உலக ஆசிரியர் தினமாகிய இன்று (06.10.2000) உங்கள் அனைவரையும் வாழ்த்துவதில் ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் தியாகராஜா மகேஸ்வரன் ஆகிய நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வரப்போகும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கப்போவது உறுதியாகிவிட்டது. இந்த அரசினால் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி, பழிவாங்கல்களுக்கு பரிகாரம் வழங்கப்படுமெனவும் (வகுப்பு - 1 க்கான 50 வயது கட்டுப்பாடு நீக்கப்படும்) பொது நிர்வாக சுற்றறிக்கை 44/90 மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்படுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி அளித்துள்ளது.

அன்பார்ந்த ஆசிரியர்களே! உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கும் உங்களினதும் குரலாக நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஒலிப்பதற்கும் நான் உறுதி பூண்டுள்ளேன். உங்களின் பெறுமதிமிக்க வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் தியாகராஜா மகேஸ்வரன் ஆகிய எனக்கு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.




| 1 | 2 | 3 | X | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

தியாகராஜா மகேஸ்வரன்
உரிமையாளர் - மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

(C/13229)



# காரைநகர் மக்களுக்கு!



எமது மண்ணிலே பிறந்து, என்றென்றும் காரை வாழ் மக்களாகிய எம்முடன் தோளோடு தோள் நின்று உதவி செய்து வரும் மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் **திரு.தியாகராஜா மகேஸ்வரன்** எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். இது எமது மண்ணுக்கு பெருமை சேர்க்கும் விடயம் என்பது எமது ஊர் மக்கள் யாவரும் அறிந்த உண்மை. வர்த்தக உலகிலும், போக்குவரத்துத் துறையிலும் சிறந்து விளங்கும் **மகேஸ்வரன்** எமது ஊரினதும், குடாநாட்டினதும் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உடையவர். எனவே காரைநகர் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு **யானைக்கும் இலக்கம் நான்கிற்கும்** புள்ளடி போட்டு திரு.மகேஸ்வரனின் வெற்றியை உறுதிப்படுத்தி எமது ஊரின் பெருமையையும் நிலை நிறுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சி



(C/13226) **காரைநகர் சின்னாலடி இளைஞர்கள்**


# பத்தாம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
**கந்தையா ஜீவரட்ணம் (குமார்)**
(வ.பி.போ.ச. மினிபஸ் சாரதி)
அன்னை மடியில்: 17-07-1960

திருமதி
**சுமதி ஜீவரட்ணம்**

ஆண்டவன் அடியில்: 28-09-1990
திதி: அட்டமி 06-10-2000

வண்ணமலர் தூவி வாணியை வழிபடும் நாளில் - நீவிர்
விண்ணகம் சென்ற விந்தைதான் என்னே! -
கண்ணிலா வஞ்சகர் செய்த தீவினை - எமைக்
கண்ணீர்க் கடலில் மூழ்கிட வைத்ததே!
எண்ணியே பத்து ஆண்டுகள் ஓடி மறைந்தன - எமது
எண்ணமோ உங்கள் நினைவினில் ஏங்கியே தவிக்குது.

*உங்கள் பிரிவால் துயருறும்*

***ஐயா, அம்மா, சகோதர சகோதரிகள் மைத்துனர்கள், மருமக்கள்.***

*நிரந்தர முகவரி:*
*7,சென்.மேரிஸ் 2ஆம் ஒழுங்கை,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

தற்காலிக முகவரி:
*7, 5ஆம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம்.*

(79161)


# கண்மூடித்தனமாக ஆதரிக்கவும் மாட்டோம்!

# கண்மூடித்தனமாக எதிர்க்கவும் மாட்டோம்!

# முறையான அரசியல் தீர்வுக்காய் போராடுவோம்!

# உருப்படியான தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்போம்!

என்றும் உங்கள் சின்னம்
நங்கூரம்

ஜனநாயக மக்கள் விடுதலை
முன்னணி

(புளொட் + ஈரோஸ்)



(78906)



*The Express Institute*

Irupalai, Kopay.

அசேதன இரசாயனம்

புதன் 4.30 p.m, ஞாயிறு 3p.m.
By
திரு. N. மகேஸ்வரன்

(79128)



# INSTITUTE DAY
OF
**JAFFNA COLLEGE**
**Institute of Technology & Institute of Agriculture**

Venue : Abel's Auditorium JCIT, Vaddukoddai
Time : 9.30 a.m. on 7th October 2000

Chief Guests :
Mr.R.Muthuratnananthan
B.sc.Eng., M.I.E.(S.L.).C.Eng,
DGM (North), Ceylon Electricity Board
&
*Mrs.S.V.Jebanesan*
L.T.C. (London), Dip. in Counselling (Sarampore)
Will distribute the Prizes
**All Students & Friends are cordially invited**

*Director*
*JCIT*

(C/13232)

Principal
JCIA



# STP Computer World

54A, Palaly Road, Kantharmadam

எமது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் அனைவருக்கும் எம்மினிய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பரீட்சை முடிவுகளை அலுவலகத்தில்ப் பார்வையிடலாம்.

மேற்படி வகுப்புக்கள் யாவும் 07,11-10-2000 அன்று ஆரம்பமாகும்.

மாணவர்கள் தங்கள் பதிவுகளை 11ம் திகதிக்குமுன் மேற்கொண்டு சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டப் படுகின்றீர்கள்.

புதிய MS Office வகுப்புக்களும் ஆரம்பமாக- விருப்பதால் கற்க விரும்புபவர்கள் அலுவலத்தில் தொடர்பு கொள்ளவும்


# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25
-
05
-
1931



மறைவு
06
-
10
-
1986

திருமதி பிலோமினம்மா டானியல்
(மறைந்த மக்கள் எழுத்தாளர் கே.டானியல் அவர்களின் துணைவியார்)

**பதினான்காம் நினைவுச் சுவடுகளில்**
**பனிக்குதம்மா நம் கண்ணீர்ப் பூக்கள்**
**பெற்றாண்டு பேணி வளர்த்தாய் பிரிந்தாய்**
**தனித்தோமம்மா நாம் உதிரிப்பூக்கள்.**

*'வசந்தம்'*
*76/2,கோயில் வீதி*
*யாழ்ப்பாணம்.*

(79165)

*தங்கள் நினைவுகளில்*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# வயலில் வேலை செய்தபோதே வெட்டிக் கொல்லப்பட்டனர்

திருகோணமலை,ஒக்.6

மூதூர்ப் பகுதியில் பூமரத்தடிச் சேனை என்னும் இடத்தில் நேற்று முன்தினம் காலை வெட்டிக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஏழு தமிழ் விவசாயிகளும் சம்பவத்தின் போது வயலில் வேலை செய்து கொண்டிருந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தின் போது சி.நல்லதம்பி (வயது 57), வி.சோமசுந்தரம் (வயது 56), ரி.கனகரட்ணம் (வயது 57), கிருஷ்ணபிள்ளை தயாஜோதி (வயது 32), எஸ்.ராசன் (வயது 37), ரி.காளிராசா (வயது 35), நல்லதம்பி அருளானந்தன் (வயது 17) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-8)

## யாழ்.நகரில் கண்காணிப்புக் குழுவினர்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் தேர்தலில் கண்காணிப்புப்பணிகளில் ஈடுபடுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

தேர்தல் முடிவடையும் வரை இங்கு தங்கவிருக்கும் இவர்கள் இன்று அரச அதிபர் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் தேர்தல் நிலைவரம் தொடர்பாகக் கலந்துரையாடுவர். (இ-3)

## நெடுந்தீவில் வாக்காளர்அட்டைகள்

நெடுந்தீவு,ஒக்.6

நெடுந்தீவு மக்களுக்கான வாக்காளர் அட்டைகளில் பெரும்பாலானவை தபாலகம் ஊடாக விநியோகிக்கப்பட்டுவிட்டன.

சிலவற்றைப் பெற்றுக் கொள்ளத் தவறியோரை நெடுந்தீவு தபாலகத்துக்கு அடையாள அட்டையுடன் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


A/L 2001
PHYSICS
இலத்திரனியல்

E.K.V.ஜோன்சன் B.Sc.

ஆரம்பம்: 06.10.2000
வெள்ளி 4.30 (ப.நே)

இணுவில்
பொருளியற் கல்லூரி
K.K.S. றோட் - இணுவில்
(79098)


## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.மெதடிஸ்த திருச்சபையினால் நடத்தப்படும் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள நிலையத்தில் நடைபெறும்.

மெதடிஸ்த சபையின் முகாமைக் குருவும் சென்.பீற்றர்ஸ் தேவாலயக் குருவுமான அருட்திரு.க.கருணசேகர தலைமையில் வைபவம் நடைபெறும். (இ)

## வீதியால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் இராணுவ வாகனம் ஒன்று சென்ற சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தக் கிரனேட் வெடிப்புச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்த விவரம் எதுவும் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (இ-5-10-51-139)

## பொ.ஐ.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி லால் பிரேமரத்தின குண்டு வெடித்தசமயம் மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலைக் குண்டுதாரியான ஆணின் சடலம் சின்னாபின்னமாகச் சிதறிக்கிடந்தது என்றும் கூறப்பட்டது.

உயிரிழந்தவர்களில் இரு பொலீஸார் தவிர்ந்த எஞ்சிய 11 பேரும் கூட்டத்துக்கு வந்திருந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களாவர்.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புச்சம்பவத்தை அடுத்து அங்குநிலவிய பதற்றநிலை காரணமாக உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கைப் பொலீஸார் அமுல் செய்தனர். தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. (இ-3-8-9)

## இடம் மாறிய தொலைபேசி உரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.மக்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடத்தும் செய்மதி மூலமான தொலை பேசி உரையாடல் நிகழ்ச்சி நேற்று மாலை 6.30 மணிக்கு ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சி இன்றும் நாளையும் இடம்பெறும் என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இந்த நிகழ்ச்சியை நடத்த முதலில் ஏற்பாடாகியிருந்தது. (இ-3)

## அவசரகால நிலை வர்த்தமானி மூலம் நீடிப்பு

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளார். ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டே இந்த நீடிப்பை ஜனாதிபதி செய்துள்ளார். (இ-3-8)

## வவுனியாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள வன்முறையான இத்தேர்தல் மூலம் பலவிதமான அரசியல் இலாபங்களை சம்பாதிப்பதற்கு தமிழ் கட்சிகள் அனைத்தும் முடிவு செய்துள்ளன. எனவே ஈழமக்களாகிய நீங்கள் இவர்களுக்கு துணைபோகாமலும் ஆதரவுகளை வழங்காமலும் செயற்படுங்கள். உங்கள் தாய் மண்ணை நீங்களே எதிரிக்கு விற்றவர் ஆகிவிடாதீர்கள் - என்று உள்ளது (அ-6)

## தேர்தலின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இந்த விவகாரத்தில் நோர்வே சம்பந்தப்பட்டது. இருதரப்புக்கும் இடையில் சமரசப் பேச்சின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தொடர்ந்தும் அந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றோம்.

தேர்தலின் பின்னர் அந்த முயற்சி முழு அளவில் மேற்கொள்ளப்படும்- என்றார்.

அதேசமயம் - நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் பேசுகையில் "விடுதலைப்புலிகளை அழிக்கும் வரை அவர்களுடன் பேச்சு என்ற விடயமே இல்லை. நோர்வே இந்த விடயத்தில் என்ன செய்தாலும் பரவாயில்லை" என்று கூறியிருந்தார். (இ-3-8)

# காரைநகரில் நேற்று தேடுதல்

காரைநகர்,ஒக்.6

காரைநகர்ப் பகுதி நேற்று நண்பகல் அளவில் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களைப் பாடசாலைகளில் ஒன்று கூடுமாறு கடற்படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர். பாடசாலைகளும் குறித்த நேரத்தில் மூடப்பட்டன. நண்பகல் 12.30 மணிக்குப் பின்னர் காரைநகருக்கான சகல போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டு இருந்தன. பிற்பகல் 4 மணியளவில் முதலில் மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர். பின்னர் ஏனையோர் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஒரு நாள் பாஸ் அனுமதி பெற்று காரைநகருக்குச் சென்றோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். (இ-73)

# ரோந்து சென்ற பொலீஸார் மீது தாக்குதல்

கொழும்பு,ஒக்.6

மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களின் எல்லையில் மூன்றாவது கொலனியில் அமைந்துள்ள சென்ரல் காம் பொலீஸ் நிலையப் பொலீஸார் நேற்று முன்தினம் காலை 7.25 மணியளவில் பொலீஸ் வாகனத்தில் ரோந்து சென்ற சமயம் அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் இரு பொலீஸ் கான்ஸ்டபிளும் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும் உயிரிழந்தனர் என்றும் -

ஆறு பொலீஸ் கான்ஸ்டபிள்களும்,பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர் என்றும்- விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தளளது.

அதன்பின் அந்தப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் மற்றும் ரி 56 ரகத் துப்பாக்கி ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும்-

பொலீஸ் ஜீப் சேதமடைந்ததாகவும் - விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது. (இ-8-3)

## போக்குவரத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

இவர்கள் இருவருடனும் நடத்திய பேச்சுக்களின் பின்னர்ஒரு மாத காலத்தில் இடர்காலக் கொடுப்பனவை பெற்றுத்தருவதாக அவர் ஊழியர்களிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உண்ணாவிரதிகளுக்கு அவர் குளிர்பானம் வழங்கி இந்தப் போராட்டத்தை முடித்துவைத்தார்.(இ-5-10-15-51-139)

## மோதலில் மூவர் காயம்

ஐ.தே.கட்சி, பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களிடையே நேற்றுமுன்தினம் ஒப்பநாயக்காவில் இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்தனர். இருதரப்பினரும் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட வாய்த் தர்க்கம் பெரும் மோதலாக வெடித்தது என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-9-8)

## கொடிகாமம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியதாகவும் அவ்வேளை புலிகள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை காலையில் அரியாலையில் சினைப்பர் தாக்குதலில் விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில் படையினரின் உட்புறத் தளம் ஒன்றைத் தாம் தாக்கிப் பாரிய சேதத்தை நேற்று உண்டாக்கியதாக புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (அ-8)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் நிஹால் மாரம்பே மற்றும் பிரதேசத் தளபதிகள், சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் ஆகியோரும்-

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராசா, வட பிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் வி.எஸ்.சொக்கலிங்கம், மின்சாரசபை பொது முகாமையாளர் முத்துரத்தினானந்தம் ஆகியோரும்- பங்குபற்றினர்.

தேர்தலை ஒட்டிய பாதுகாப்பு, போக்குவரத்து, மின்சார வசதி உட்பட பல விடயங்கள் குறித்து அதில் ஆராயப்பட்டது. (இ-3)


வேலையற்ற தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் உடையோர் சங்கம்

அவசர பொதுக் கூட்டம்

காலம் :- நாளை மறுதினம் (08.10.2000) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11.00 மணி (பு.நே)

இடம் :- நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்.

(79121) - செயலாளர்

BIT
விரிவுரைகள் ஆரம்பம்

மேற்படி பட்டப்படிப்புக்கான விரிவுரைகள் அனைத்தும் தலைமையலுவலகத்தில் அறிமுக வகுப்புகளுடன் 07-10-2000 காலை 09.00 மணி முதல் ஆரம்பமாகின்றன. அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்

முக்கிய குறிப்பு

மேலும் BIT போட்டி பரீட்சையில் தெரிவு செய்யப்படாத மாணவர்களும், கணனித்துறையில் பட்டதாரியாக விரும்பும் மாணவர்களும் 07-10-2000 நடைபெறவிருக்கும் அறிமுகத்தில் கலந்து கொள்ளவும். இவர்களுக்கான [illegible] திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளோம்.

இயக்குனர், IIS
100, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

நன்றி கூறல்

வேலையற்ற தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் உடையோர் சங்கத்தினரின் ஒரு தொகுதியினருக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்தைப் பெற்றுத் தந்தமைக்கும் இந் நியமனத்தை நிரந்தர நியமனமாக பெற்றுத்தருவதற்கு உறுதி அளித்துள்ளமைக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கௌரவ செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்குக் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழு தலைவருமாகிய K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பெரு முயற்சியால் எமது வாழ்வினை வளம் பெறச் செய்தமைக்கு நாம் என்றென்றும் தலை வணங்கி எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(79120) -சங்க அங்கத்தவர்கள்

IBMS
Institute of Business Management Studies

ஆசிரியர் தினமாகிய
இந் நன்நாளில்
(06.10.2000 வெள்ளிக்கிழமை)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
19ஆவது பட்டமளிப்பு
விழாவில்
கணனிப் பட்டதாரிகளாகப் பட்டம் பெறும்
எமது நிறுவன
விரிவுரையாளர்களையும்
ஏனைய பட்டம் பெறும் பட்டதாரிகளையும்
வாழ்த்திப்
பாராட்டுகின்றோம்.
701, K.K.S. Road, Jaffna. (C/13240)

எமது புதிய
வீடியோ CD
வெளியீடு!
சத்தியா, கரன்,
கௌசல்யா நடிப்பில்
* இளையவன்
(பிரதிகளை உடன்
பெற்றுக் கொள்ளலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/13241)

சுப்பஸோ - கலர்லாப்
ஸ்தாபனத்தாரின்
ஒரு நற்செய்தி!

இன்றைய தினம் (06.10.2K) யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து வெளிப்புறப் படப்பிடிப்பினை மேற்கொள்ளவென பல்கலைக்கழக நுழைவாயில் முன்பாக எமது தற்காலிக காரியாலயம் நிறுவப்பட்டுள்ளது என்பதனையும் கலர், கறுப்பு - வெள்ளை படங்களை நீங்கள் தெரிவு செய்யும் வேண்டிய அளவுகளில் உடனுக்குடன் படம்பிடித்துப் பெற்றுக் கொள்ளவும், அத்துடன் எமது நிரந்தர முகவரியிலும் எமது வழமையான சேவை இடம்பெறும் என்பதனையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்றும்! இன்றும்!! என்றென்றும்
யாழ்.நகரில் தமக்கென
ஒரு தனி இடம் பிடித்தவர்கள்
சுப்பஸோ - வீடியோ ஓடியோ
அன்ட் கலர் லாப்

140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C/13244)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.